# அரங்கம் செய்திகள்


தமிழ் மக்களுக்கான ஒரு தொடர்பூடகம்

வார இதழ் – இலவசம்

வெள்ளி, டிசம்பர் 28, 2018. இதழ் - 45







**கிளிநொச்சி, முல்லைத்தீவு வெள்ளம் - இப்போதே பேசவேண்டும்**

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் ...

பக்கம் - 04

**கிழக்கு அபிவிருத்தி அமைச்சு - யதார்த்தம் என்ன?**



இலங்கையில் நடந்த அரசியல் நெருக்கடி நாடகம் முடிவுக்கு வந்து...

பக்கம் - 03



**பாரம்பரிய மருத்துவ முறைகளும் பரியாரிமாரும் அருகும் நிலை**

ஒரு இனத்தின் தொன்மையினை பறைசாற்றுவதாக பண்பாடுகள் அமைந்துள்ளன.

பக்கம் - 06



**தென்னன் மரபு அடி (தென்னமரபாடி) - பறிபோகும் தமிழர் இதய பூமி**

பக்கம் - 07





## நாடாளுமன்றத் தேர்தலுக்கு இரு கட்சிகளும் தயார் - சிறப்பு பிரேரணை சமர்ப்பிக்க ஏற்பாடு?

அடுத்த ஆண்டு முற்பகுதியில் நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவது தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இணக்கப்பாட்டை ஏற்படுத்தியுள்ளதாக கட்சித் தகவல்கள் கூறுகின்றன.

தற்போதைய அரசாங்கத்தின் பதவிக்காலம் 2020 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் நிறைவடைகின்றது. ஆனாலும் பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்னதாக நாடாளுமன்றத் தேர்தலை நடத்த வேண்டிய அவசியம் குறித்து இரு பிரதான கட்சிகளும் தீர்க்கமான முடிவுக்கு வந்துள்ளதாக கட்சித் தகவல்கள் கூறுகின்றன.

அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் நான்கு ஆண்டுகளும் ஆறு மாதங்களும் நிறைவடைந்த பின்னரே நாடாளுமன்றத் தேர்தலை நடத்த முடியும்.

ஆனால் குறித்த பதவிக்காலத்துக்கு முன்னதாக நாடாளுமன்றத் தேர்தலை நடத்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் சிறப்பு பிரேரணை ஒன்றை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளுடன் பிரேரணையை நிறைவேற்ற இரு பிரதான கட்சிகளும் இணங்கியுள்ளதாக கட்சித் தகவல்கள் கூறுகின்றன.

அடுத்த நிதியாண்டுக்கான முழுமையான வரவு செலவுத் திட்டத்தை ஜனவரி மாதம் சமர்ப்பித்து நிறைவேற்றிய பின்னர் நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவதற்கான பிரேரணையை அரசாங்கம் சமர்ப்பிக்கும் என மூத்த அமைச்சர் ஒருவர் கூறியுள்ளார்.

ஆனால் நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னதாக மாகாண சபைகளின் தேர்தல்களை நடத்த வேண்டும் என ஜே.வி.பி வலியுறுத்தியுள்ளது. ஒன்பது மாகாணங்களுக்கான தேர்தல்களையும் ஒரே நேரத்தில் நடத்த முடியாதெனவும்

தொடர்ச்சி... (பக்கம் -02 )

## ஐரோப்பாவில் கறிவேப்பிலைக்குத் தடை



இத்தாலி, கிரேக்கம், சைப்பிரஸ் மற்றும் மோல்ட்டா ஆகிய நாடுகளுக்குச் செல்லும் இலங்கைப் பயணிகள் தம்மோடு கறிவேப்பிலையை எடுத்து வரவேண்டாம் என்று இத்தாலியின் சிசிலி கட்டானியாவில் இருக்கும் இலங்கைக்கான தூதரகம் அறிவித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியம், சிறு பூச்சிகள் பரவுவதை தடுப்பதற்கான தமது அறிவித்தலின் மூலம் கறிவேப்பிலை

தொடர்ச்சி... (பக்கம் -02 )

## ஞாயிறன்று கிழக்கு மாகாண ஆசிரியர் இடமாற்ற மேன்முறையீட்டுச்சபை:

### ‘99வீதமான ஆசிரியர்கள் மேன்முறையீடு’ மாகாணக் கல்விப் பணிப்பாளர் கவலை

(காரைதீவு சகா)

கிழக்கு மாகாண மட்ட மேன்முறையீட்டு ஆசிரியர் இடமாற்றசபை அமர்வு எதிர்வரும் ஞாயிறன்று(30) மாகாண கல்வித்திணைக்களத்தில் நடைபெறுமென்று கிழக்கு மாகாணக் கல்விப்பணிப்பாளர் எம்.கே.எம்.மன்சூர் தெரிவித்தார்.

மேன்முறையீட்டு இடமாற்றசபை அமர்வு கடந்த 26ஆம் திகதி நடைபெறவிருந்தபோதிலும் சில வலயங்களிலிருந்து மேன்முறையீட்டு இடமாற்ற பட்டியல் வந்து சேராத காரணத்தினால் இது ஞாயிற்றுக்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்று மாகாணக் கல்விப்பணிப்பாளர் கூறியுள்ளார்.

இவை குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது. ‘கடந்த காலங்களைப்



போலல்லாது இம்முறை மாகாண மட்ட மேன்முறையீடுகள் அந்தந்த வலயத்திலும் இடம்பெற்று அவர்களது கருத்துகளும் பெறப்பட்டுள்ளன.

கிழக்கில் இவ்வருடம் இடமாற்றப்படவுள்ள இரண்டாம்தொகுதி 447 ஆசிரியர்களுள் 99வீதமானோர் தமக்கு வழங்கப்பட்ட

தொடர்ச்சி... (பக்கம் -04)


ஊழலை ஒழிப்போம்!

அதற்கு எதிராக குரல்கொடுப்போம்

தமிழிலும் இலவச சட்ட ஆலோசனை பெற

அழையுங்கள்

011 2 501 503

TRANSPARENCY INTERNATIONAL SRI LANKA

a nation that upholds integrity

நேர்மையின் புகலிடம்

இல: 5/1, எல்பேங்க் வீதி, கொழும்பு - 05

Email: help@tisrilanka.org Web: www.tisrilanka.org

மாத்தறை - 041 22 33 522 - வவுனியா - 024 222 76 76




# மக்களது எதிர்ப்பையும் மீறி அணைக்கட்டு வேலை'

## அரச அதிபர் ஆளுநரிடம் காரைதீவு தவிசாளர் முறைப்பாடு



(காரைதீவு நிருபர் சகா)

காரைதீவு – நிந்தவூர் எல்லையிலுள்ள வெட்டுவாய்க்கால் ஆற்றில் தென்பக்கமாக நிர்மாணிக்கப்பட்டுவரும் 550 மீற்றர் நீள அணைக்கட்டு வேலைகள், காரைதீவு மக்கள் எதிர்ப்புத் தெரிவித்தும் நேற்று(27) மீண்டும் ஆரம்பித்துள்ளன.

நீர்பாசனத்திணைக்கள அதிகாரிகள் இதுவிடயத்தில் காரைதீவு பிரதேச செயலாளரையோ,தவிசாளரையோ கலந்தாலோசிக்காது மீளவும் கட்டுமான வேலைகளை ஆரம்பிக்க அனுமதியளத்திருப்பதையிட்டு மக்கள் அதிருப்தி அடைந்துள்ளனர்.

ஆற்றின் மத்தியூடாக அணைக்கட்டு கட்டுவதற்கு திணைக்களம் அனுமதி வழங்கியுள்ளதா? என்று தவிசாளர் கேட்டுள்ளார். அவ்வாறு கட்டுவதால் வெள்ளகாலத்தில் இரு ஊர்களுக்கும் சிவன்ஆலயத்திற்கும் பாதிப்பு ஏற்படுமென்று மக்களால் கூறப்பட்டுள்ளது.

மக்களது பாரிய ஆர்ப்பாட்டத்திற்கு மாறாக இவ்வேலை தொடர்வதையிட்டு தவிசாளர் கி.ஜெயசிறில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அம்பாறை அரச அதிபர், கிழக்கு ஆளுநர் ஆகியோரிடமும் நீதிகோரி முறையிட்டுள்ளார்.

தொடர்ச்சி...

## நாடாளுமன்றத் தேர்தலுக்கு இரு கட்சிகளும் தயார் - சிறப்பு பிரேரணை சமர்ப்பிக்க ஏற்பாடு?

இதனால் உடனடியாகத் தேர்தல்களை நடத்த வேண்டிய மாகாண சபைகளுக்கு மாத்திரம் தேர்தல்களை நடத்துமாறும் ஜே.வி.பி. வலியுறுத்தியுள்ளது.

இதேவேளை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மார்கழிமாத விடுமுறையை முன்னிட்டு வெளிநாடு சென்றுள்ள நிலையில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் சபாநாயகர் கரு ஜயசூரியவும் புதன்கிழமை இரவு அலரிமாளிகையில் சந்தித்து உரையாடியுள்ளனர். சுமார் ஒன்றரை மணிநேரமாக இடம்பெற்ற சந்திப்பில் நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவது குறித்தும், அதுவரையும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் ஒத்துழைத்துச் செயற்படுவது தொடர்பாகவும் பேசப்பட்டதாக ஐக்கிய தேசியக் கட்சித் தகவல்கள் கூறுகின்றன.

# பஸ் கட்டணம் குறைக்கப்படும்



அரச, தனியார் பஸ் கட்டணங்கள் 4.2 சதவீதத்தால் குறைக்கப்படும் என இலங்கை தேசியபோக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அமைச்சர் அர்ஜுனா ரணதுங்க பஸ் உரிமையாளர்களுடன் நடத்திய பேச்சுவார்த்தையில் கட்டணக்குறைப்புப் பற்றிய தீர்மானம் எட்டப்பட்டது. எவ்வாறாயினும், குறைந்தபட்ச கட்டணமான 12 ரூபாவில் மாற்றம் இருக்காதென ஆணைக்குழுவின் தலைவர் எம்.பி.ஹேமச்சந்திர தெரிவித்தார்.

பஸ் கட்டணங்கள் குறைக்கப்படுவதால், முச்சக்கரவண்டி கட்டணங்களையும், பாடசாலை வேன் கட்டணங்களையும் குறைப்பதென குறித்த சங்கங்கள் தீர்மானித்துள்ளன. இதன் பிரகாரம் முச்சக்கர வண்டிகளில் முதல் கிலோ மீற்றர்களுக்கான கட்டணம் 50 ரூபாவாக இருக்கும். பாடசாலை வேன் களுக்கான, கட்டணம் மூன்று சதவீதத்தால் குறைக்கப்படும்

# வருடாந்த ஒன்றுகூடலும் கழக இரவும்!



காரைதீவின் பழம்பெரும் முன்னோடி காரைதீவு விளையாட்டுக்கழகத்தினதும் விபுலாநந்த சனசமுக நிலையத்தினதும் வருடாந்த ஒன்றுகூடலும் கழக இரவும் நாளை(29) சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

கழகத்தலைவர் ஆனந்தன் அமிர்தானந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வுகளில் கழகப்போசகர்களான முன்னாள் பிரதேசசெயலாளர் எஸ். இராமகிருஸ்ணன், முன்னாள் அரச நிலஅளவையாளர் வே.இராஜேந்திரன், உதவிக்கல்விப்பணிப்பாளர் வி.ரி. சகாதேவராஜா ஆகியோருடன் அதிதிகளும் கலந்துகொள்வார்கள்.

காலை அமர்வாகவும் மாலை அமர்வாகவும் இருவேறு அமர்வுகள் புதிய நிருவாகத்தெரிவுகளுடன் நடைபெறவுள்ளது என கழகச்செயலாளர் எஸ்.கிறிசாந் தெரிவித்தார்.

# இனி மத்திய கிழக்கு கடவுச்சீட்டு கிடையாது

குடிவரவு குடியகழ்வு திணைக்களத்தினால் மத்திய கிழக்கு நாடுகளுக்கான கடவுச்சீட்டு டிசம்பர் 31 ஆம் திகதியின் பின்னர் விநியோகிக்கப்பட மாட்டாது என குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டு ஆணையாளர் எம்.என். ரணசிங்க தெரிவித்துள்ளார்.



எனவே எதிர்வரும் ஜனவரி மாதம் 1 ஆம் திகதி முதல் எல்லா நாடுகளுக்குமான கடவுச்சீட்டு மாத்திரமே விநியோகிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். அறிக்கை ஒன்றை வெளியிட்டு குடிவரவு குடியகழ்வு திணைக்களத்தினர் இந்த விடயம் தொடர்பில் தெரிவித்துள்ளனர்.

# சம்மாந்துறையில் வரலாறு காணாத எழுச்சிபூர்வமான சென்றாலியன் நடைபவனி!



சம்மாந்துறை முஸ்லிம் மத்திய தேசிய கல்லூரியின் 110ஆண்டுகள் நிறைவையொட்டி நேற்று முன்தினம் சனிக்கிழமை வரலாறு காணாத எழுச்சிபூர்வமான சென்றாலியன் நடைபவனி சம்மாந்துறையில் நடைபெற்றது.

கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் இந்நடைபவனியை ஏற்பாடு செய்திருந்தது. பழைய மாணவர் சங்கத்தின் தலைவரும் அதிபருமான முத்து இஸ்மாயில் தலைமையில் இந்நடைபவனி மிகவும் கோலாகலமாக நடைபெற்றது. பழைய மாணவர் சங்கம் வெளியிட்ட சென்றாலியன் ரீசேர்ட்டை அணிந்துகொண்டு பல்லாயிரக் கணக்கான பழைய மாணவர்கள் வலம் வந்தமை கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. இந்நிகழ்வில் குதிரை மாட்டுவண்டில், உழவு இயந்திரங்கள் மற்றும் ஏனைய வாகனங்களும் கலந்துகொண்டன.

கல்லூரியின் பழைய மாணவர்களான பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஐ.எம் மன்சூர், வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் ஐ.எம்.ஹனிபா, அமைச்சின் செயலாளர் எம்.ஐ.அமீர், தவிசாளர் எம்.எ.எம்.நௌசாட் உள்ளிட்ட பலமுக்கிய பிரமுகர்களும் இதில் பங்கேற்றார்கள்.
(காரைதீவு நிருபர் சகா)

# மட்டக்களப்பு மாவட்ட தேசிய பாதுகாப்பு தின நிகழ்வு - 2018



“மிகவும் பாதுகாப்பான நாளை நோக்கி” என்ற தொனிப்பொருளில் கடந்த புதன்கிழமை காலை 9.25 மணிக்கு தேசிய பாதுகாப்பு தினம் தேசிய ரீதியில் அனைத்து மாவட்டங்களிலும் அனுஷ்டிக்கப்பட்டது.

அந்த வகையில் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் மா.உதயகுமார் தலைமையில் நடைபெற்ற இந்த தேசிய பாதுகாப்பு நிகழ்வினை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் ஏற்பாடு செய்திருந்தது.

2004ஆம் ஆண்டு ஏற்பட்ட ஆழிப்பேரலை அனர்த்தத்தில் உயிர் நீத்த அனைவருக்குமாக ஆத்ம சாந்தி வேண்டி 2 நிமிட அஞ்சலி செலுத்தப்பட்டது. அனர்த்த முகாமைத்துவ நிலையமும் - அனர்த்த முகாமைத்துவ அமைச்சும் இணைந்து தேசிய ரீதியில் நடைமுறைப்படுத்தும் தேசிய பாதுகாப்புக்குரிய நடவடிக்கைகளின் முக்கிய செயற்பாடாக தேசிய பாதுகாப்பு தினம் வருடம் தோறும் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. 2004 டிசம்பர் 26 ஆம் திகதி ஏற்பட்ட சுனாமி – 2004 இந்தியப் பெருங்கடல் நிலநடுக்கத்தினால் மோசமாகப் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் மட்டக்களப்பும் ஒன்றாகும்.

மட்டக்களப்பு மாவட்ட செயலக தேசிய பாதுகாப்பு தின நிகழ்வில், மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்சினி சிறிகாந்த், மேலதிக அரசாங்க அதிபர் காணி- திருமதி நவரூபரஞ்சினி முகுந்தன், அனர்த்த முகாமைத்துவ நிலைய உதவிப்பணிப்பாளரான மட்டக்களப்பு மாவட்டத்துக்கு புதியதாக நியமனம் பெற்றுள்ள உதவிப்பணிப்பாளர் எஸ். கோகுலராஜா, திணைக்களத்தலைவர்கள், பதவிநிலை உத்தியோகத்தர்கள், உத்தியோகத்தர்கள் உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர்.

தொடர்ச்சி...


## ஐரோப்பாவில் கறிவேப்பிலைக்குத் தடை

அங்கு கொண்டு வரப்படுவதைத் தடை செய்திருக்கிறது.

சில உடலுக்கு தீங்கு விளைவிக்கக்கூடிய பூச்சிகள் கறிவேப்பிலையில் இருப்பதாகக் கூறியே ஐரோப்பிய ஒன்றியம், இலங்கையில் இருந்து வரும் பயணிகள் இவற்றை எடுத்து வருவதற்கு டிசம்பர் 24ஆம் திகதி முதல் தடை விதித்துள்ளது.

இலங்கை பயணிகளின் பைகளில் இருந்து இத்தகைய தீங்கு விளைவிக்கும் பூச்சிகள் கறிவேப்பிலையுடன் கொண்டு வரப்பட்டதை பல தடவைகள் ஐரோப்பிய சுங்க அதிகாரிகள் கண்டதாக அவர்கள் கூறியுள்ளனர்.

# கிழக்கு அபிவிருத்தி அமைச்சு - யதார்த்தம் என்ன?



இலங்கையில் நடந்த அரசியல் நெருக்கடி நாடகம் முடிவுக்கு வந்து, ரணில் விக்கிரமசிங்க தலைமையில் மீண்டும் அமைச்சரவை நியமிக்கப்பட்ட பின்னர்தான் தமிழர் தரப்பில் பெரியதொரு சர்ச்சை உருவாகியுள்ளது.

தமிழ் மக்கள் பிரதிநிதிகளான தமிழ் தேசிய கூட்டமைப்பினரின் பூரண ஆதரவுடன் உருவாக்கப்பட்டுள்ள தற்போதைய அரசாங்கத்தின் அமைச்சுப் பதவிகள் எவற்றையும் தமிழ் தேசிய கூட்டமைப்பு பெற்றுக்கொள்வதில்லை என்ற இறுக்கமான முடிவு தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைமையால் எடுக்கப்பட்டுள்ளது.

ஆனாலும் இன்றைய சூழ்நிலையில் வடக்கு, கிழக்கின் அரசாங்க செயற்பாடுகள் அனைத்தையும் தீர்மானிக்கும் சக்தியாக தமிழ் தேசிய கூட்டமைப்பே செயற்படும் என்பது சிறு பிள்ளைக்கும் தெரியும்.

அவ்வாறான நிலையில் கூட்டமைப்பினரால் கூறப்பட்ட நிபந்தனைகளை ஏற்று புனர்வாழ்வு மற்றும் மீள் குடியேற்றம் என்பவற்றோடிணைந்த வடக்கு மாகாண அபிவிருத்தி அமைச்சு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்களின் பொறுப்பின் கீழ் கொடுக்கப்பட்டுள்ளது. அதுவே இன்றைய முக்கிய பேசுபொருளாக தமிழர் தரப்பில் மாற்றமடைந்துள்ளது.

கூட்டமைப்பின் முழு ஆதரவில் செயற்படும் அரசானது வடமாகாணத்துக்கு தனியாக அபிவிருத்தி அமைச்சை ஏற்படுத்தியுள்ள போதிலும் கிழக்கு மாகாணத்துக்கு அவ்வாறானதொரு அமைச்சை ஏற்படுத்தவில்லை என்பது கிழக்கு மாகாணத்திலுள்ள பலரது ஆதங்கம்.

**குழந்தைவேல் நவநீதன்**

அதில் நியாத்தன்மையும் உள்ளது.

எந்த விடயத்திலும் வடக்கு கிழக்கு எனக் கோசமிடும் கூட்டமைப்பு, வடக்கு, கிழக்கு இணைப்பை கொள்கையாக கொண்ட கூட்டமைப்பு வடக்குக்கான அபிவிருத்தி அமைச்சு என்று வந்த நேரத்தில் கிழக்கு அபிவிருத்தி தொடர்பாகவும் கேள்வியெழுப்பியிருக்க வேண்டும்.

ஆனால் அதைப் பற்றி அக்கறையெடுக்க கூட்டமைப்பினர் தவறிவிட்டார்கள் என்பதே கிழக்கு மாகாண தமிழ் மக்களின் ஆதங்கம்.

இத்தனைக்கும் வடமாகாண அபிவிருத்தி அமைச்சு என்பது புதிதாக உருவாக்கப்பட்ட ஒன்றல்ல. ஏற்கனவே வடமாகாண, வடமத்திய மாகாண, மேல்மாகாண, மத்திய மாகாண(கண்டி அபிவிருத்தி) அபிவிருத்தி அமைச்சுக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. அப்போதெல்லாம் இந்தக் கிழக்கு மாகாணத்துக்கு அபிவிருத்தி அமைச்சு வழங்கப்படவில்லை என்ற ஏமாற்றம் எவருக்கும் ஏற்படவில்லை. இப்போது மட்டும் புதிதாக ஏன் கிழக்கு மக்கள் கேள்வி கேட்கின்றனர் என்ற எண்ணம் பலருக்கும் உருவாகலாம்.

அதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன.

கடந்த 26.10.2028 அன்று இலங்கை ஜனாதிபதி திடீரென முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அவர்களுக்கு பதவிப்பிரமாணம் செய்து வைத்த போது சிலர் அவசரமாகக் கட்சி தாவிக்கொண்டனர்.

அவ்வாறு எங்கள் மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரும் ஓடிச்சென்று, ஒரு பிரதியமைச்சர் பதவியைப் பெற்றுக்கொண்டார்.

அந்த அமைச்சுக்கான அலுவலகமோ அந்த அமைச்சுக்குள் வரும் திணைக்களங்கள் பற்றியோ தெரியாமல் பெற்றுக்கொண்ட அமைச்சின் பெயர்தான் கிழக்கு மாகாண அபிவிருத்திப் பிரதி அமைச்சு.

(பிரதேச அபிவிருத்தி அமைச்சின் கீழ் வந்த பிரதி அமைச்சு. ஆனால் கிழக்கு மாகாணம் என தனியாக வரையறுக்கப்பட்டிருந்தது)

பாராளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரன் அவர்கள் மூலமாக வெளித்தெரிந்த அந்த அமைச்சின் காரணமாகவே கிழக்கு அபிவிருத்தி அமைச்சு என்ற பதம் பிரபலமானது. இப்போது புதிய ஆட்சியில் கிழக்கு மாகணத்துக்கான அபிவிருத்தி அமைச்சு கொடுக்கப்படவில்லை, அது ஏன் என மக்கள் கேள்வி கேட்கவும் இதுவொரு காரணமாக அமைந்துள்ளது. அடுத்ததாக வடமாகாண அபிவிருத்தி அமைச்சு பிரதமரின் கீழ் கொண்டுவரப்பட்டமை.

அதாவது வடக்கு கிழக்கு மாகாணங்களில் கூட்டமைப்பின் நேரடி அவதானிப்புகளின் கீழ் அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட ஏதுவாகவே பிரதமரின் கீழ் குறித்த அமைச்சு கொண்டுவரப்பட்டுள்ள நிலையில் கூட்டமைப்பினர் கிழக்கு அபிவிருத்தி என்பதையும் அதனோடு ஏன் கொண்டுவரவில்லை என்ற கேள்வி உருவாகிறது.

கடந்த காலங்களில் வடக்கின் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் கீழ் குறித்த அமைச்சு இருந்தபோது கிழக்கில் எவரும் கேள்வி கேட்கவில்லை.

அதன் பின்னர் சுவாமிநாதன் அவர்களின் கீழ் இருந்தபோதும் அதைப்பற்றி யாரும் அலட்டிக்கொள்ளவில்லை.

ஆனால் இன்று கூட்டமைப்பின் மறைமுக அமைச்சாக உள்ள வடக்கு அபிவிருத்தி அமைச்சுடன் கிழக்கு அபிவிருத்தி என்ற பதம் சேர்க்கப்படவில்லை என்பதே பிரச்சினையாக உள்ளது. வடக்கு மாகாணத்துக்கு அபிவிருத்தி அமைச்சு வழங்கப்பட்டமையை யாரும் குறைப்படவில்லை.

அது கட்டாயம் தேவையான ஒன்றுதான்.

போரால் பாதிக்கப்பட்ட வடமாகாணத்தைக் கட்டியெழுப்ப வேண்டிய தேவை அத்தியாவசியமானது.

அதேநேரம் கிழக்கு மாகாணமும் போரால் பாதிப்படைந்த மாகாணம்தான். காலத்துக்குக் காலம் கிழக்கில் அமைச்சுப் பதவிகளை வகித்துவரும் முஸ்லிம், சிங்கள அரசியல்வாதிகளால் கிழக்கு மாகாண முஸ்லிம், சிங்கள மக்கள் அபிவிருத்தியடைந்துள்ள போதிலும் கிழக்கு மாகாண தமிழ் மக்களை அந்த அபிவிருத்திகள் எட்டவில்லை.

கிழக்கு மாகாண முதலமைச்சராக சந்திரகாந்தன் என்ற பிள்ளையான் இருந்தபோது ஓரளவு சிறிய முன்னேற்றங்கள் ஏற்பட்டன. அதன் பின்னர் நிலைமை மோசமானதாகவே உள்ளது.

ஒப்பீட்டளவில் கிழக்கு மாகாண மாவட்டங்களில் மிகவும் மோசமான பின்தங்கிய தமிழ் பிரதேசங்கள் அதிகம். அவ்வாறான நிலையில் கிழக்கு மாகாணத்திற்கும் அபிவிருத்தி அமைச்சு தனியாகத் தேவை.

அதுவும் தமிழர் தரப்பில் ஒருவரை நியமிக்கவேண்டிய கட்டாயதேவை உள்ளது. குறித்த இந்த விடயம் தொடர்பாக கூட்டமைப்பின் ஆதரவாளர்கள் சிலர் கூட்டமைப்பின் தலைமையிடம் அதிருப்தி தெரிவித்த போது வடக்கு அபிவிருத்தி அமைச்சினூடாக வடக்கு, கிழக்கு என இரு மாகாணங்களுக்குமே வேலைகள் செய்யப்படும் எனவும் கிழக்கு மாகாண செயற்பாடுகளை பாராளுமன்ற

தொடர்ச்சி... (பக்கம் -15 )

# மார்கழி வந்தாலே...

மார்கழி வந்தாலே இலங்கையின் வடக்குக் கிழக்கில் வாழ்வது பயமென்றாகிவிடுகிறது. மழை வருகிறதா, வெள்ளம் வருகிறதா, சூறாவளி வருகிறதா என்ற நிலையில் இருந்து தற்போது சுனாமி வந்துவிடுமோ என்ற அச்சமும் சேர்ந்திருக்கின்றது.

இயற்கையின் அனர்த்தங்களுக்கு முகம்கொடுப்பது கடினந்தான். ஆனால் முடிந்த அளவுக்கு முன்னேற்பாடாக இருக்கலாம் அல்லவா?

இந்த வருடம் கிழக்கில் வெள்ளம் குறைவுதான். (கடவுளே இன்னமும் மாரிகாலம் முடியவில்லை!) ஆனால், கிளிநொச்சி, முல்லைத்தீவில் வாழும் எமது உறவுகள் சோகத்தில் இருக்கிறார்கள். போரில் பாதிக்கப்பட்டு மீண்டுவரும் அவர்களுக்கு இது “மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்த” கதை.

இப்படியான இடர்காலங்களில் நாமும் எமது இளைஞர்களும் ஆபத்துதவிக்கு வீறுகொண்டு எழுந்து செயற்படுகின்றோம் என்பது இங்கு மகிழ்ச்சிகரமான விடயம். உண்மையில் இது குறித்து நாம் பெருமைப்படலாம்.

அனர்த்த முகாமைத்துவ மீட்புப் பணிகளிலும் அதிகாரிகளின் பணிகள் அண்மைக்காலத்தில் ஓரளவுக்கு பாராட்டக்கூடிய வகையில்தான் இருப்பதாக அண்மைய தகவல்கள் கூறுகின்றன. பிராந்திய ஊடகர்களின் செயற்பாடும் வெள்ளப்பாதிப்புக்களில் பாராட்டப்பட்டுள்ளது.

ஆனால், அனர்த்தங்களை எதிர்கொள்வது என்பது அது வந்துவிட்ட பின்னர் மீட்பில் ஈடுபடுவது மாத்திரமல்ல.

வருமுன் காப்பது மிகவும் முக்கியம். வெள்ள நிலைமை குறித்து எழுதிய செய்தியாளர் கருணாகரன்கூட எமது உட்கட்டமைப்பில் செய்யப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளே இயற்கை அனர்த்த பாதிப்புக்களை தடுக்கும் அல்லது குறைக்கும் என்று கூறியுள்ளார். போரில் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மாவட்டங்களுக்கு அபிவிருத்தி என்பதே கனவாக இருக்கும் நிலையில், கட்டுமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் திட்டமிடலில் கவனம் செலுத்தாமல் இருப்பது மேலும் அழிவுக்கு வழி செய்துவிடலாம்.

அரசியல்வாதிகளுக்கு இந்த விடயத்தில் துறைசார் அறிவு போதாமல் இருக்கலாம், ஆனால், மாவட்ட மற்றும் மாகாண மட்ட அதிகாரிகள் எதிர்காலத்திலாவது இந்த விடயத்தில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும்.

அதேவேளை, போரில் சிதைந்து போய் இருக்கும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் மீள்கட்டமைப்பு என்பது 100 வீத மீளுருவாக்கத்தை தேவையாகக் கொண்டிருக்கின்றது. அரைகுறை அபிவிருத்தி இங்கு பாதக விளைவுகளையே தரும். ஆழமான திட்டமிடலும், நீடித்த இருப்புக்கான அபிவிருத்தியும் இங்கு தேவைப்படுகின்றது.

**சீவகன் பூபாலரட்ணம்**

அரசாங்கத்தை பொறுத்தவரை வடக்கு, கிழக்கு அபிவிருத்தி அல்லது புனரமைப்பு என்பதை ஒரு கனதியான, மிக மிக தேவையான விடயமாக அது கொள்ளவில்லை என்றே எண்ணத் தோன்றுகின்றது. ‘அபிவிருத்தி பற்றி இப்போது பேசமுடியாது’ என்று கூறும் அரசியல்கட்சிகளும், தலைவர்களும் தமது கருத்தை மீள்பரிசீலனை செய்ய வேண்டும். மக்கள் மௌனமாகப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அவ்வப்போது யாரையும் ஏமாற்றலாம். ஆனால், எல்லாரையும் எல்லா நாளும் ஏமாற்ற முடியாது. தவறுபவர்களை, எதிர்காலம் நிச்சயமாகத் தண்டிக்கும்.

# கிளிநொச்சி, முல்லைத்தீவு வெள்ளம் - இப்போதே பேசவேண்டும்



கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் 86 ஆயிரத்து 695 பேர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இரண்டு பேர் உயிரிழந்துள்ளனர். 89 வீடுகள் முழுமையாகவும், ஆயிரத்து 308 வீடுகள் பகுதி அளவிலும் சேதமடைந்துள்ளன. 8 ஆயிரத்து 693 பேர் தொடர்ந்தும் தற்காலிக முகாம்களில்

தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இது அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் அறிவிப்பு.

ஆனால், இதை விட இன்னும் ஒரு சில ஆயிரம் பேர் கூடுதலாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று உள்ளூர்த் தகவல்கள் தெரிவிக்கின்றன. அவர்கள் இடம்பெயர்ந்து முகாம்களுக்கோ பொது இடங்களுக்கோ வரவில்லை. தங்கள் வீடுகளில் மிகுந்த சிரமங்களின் மத்தியில் வாழ்கின்றனர். அவர்களுடைய கால்நடைகளும் பயிர்களும் அழிந்துள்ளன. போக்குவரத்துகளும் தொழில்களும் பாதிக்கப்பட்டுள்ளன. ஏன், இந்தப் பத்தியை எழுதிக் கொண்டிருக்கும் எழுத்தாளர்கூட சிறைப்படுத்தப்பட்டதைப்போல போக்குவரத்துக்கான பாதைகளை இழந்த நிலையிலேயே இன்று (26.12.2018) முழுவதும் இருக்கிறார். அந்தளவுக்கு சுற்றிவளைத்திருக்கிறது வெள்ளம். போதாக்குறைக்கு வீதிகளை மூடி அடாத்துப் பண்ணுகிறது.

இந்த வெள்ளப்பாதிப்புக்குக் காரணங்களாக ஒரே நாளில் 360 – 400 மி.மி வரை பெய்த கூடுதலான மழை வீழ்ச்சி, பிறகும் தொடர்ச்சியாக பெய்த மழை, உரிய நேரத்தில் இரணைமடுக்குளத்தின் வான்கதவுகள் திறக்கப்படாமை, சீரான வடிகாலமைப்பின்மை, நீரோடும் பகுதிகளிலும் நீரேந்து பிரதேசங்களிலும் அமைந்திருக்கும் அத்துமீறிய குடியேற்றங்கள், முறையற்ற மணல் அகழ்வுகள் எனப் பலவும் சொல்லப்படுகின்றன.

இதையெல்லாம் கவனித்தே ஆக வேண்டும். அதாவது அனர்த்த நிலைமைகளை முகாமை செய்வதற்கான ஏற்பாடுகளை நிர்மாணத்திலும் நிர்வாகத்திலும் கொண்டிருக்க வேண்டியது அவசியம் என்பதை தற்போதைய நெருக்கடிகள் உணர்த்தியுள்ளன.

வெள்ளத்திலிருந்து சனங்களை மீட்பதில் உள்ளூர் இளைஞர்களும் படையினரும் முன்னின்று ஈடுபட்டனர். தொடர்ந்து அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் உத்தியோகத்தர்களும் மாவட்டச் செயலகங்கள், பிரதேச செயலகங்களின் உத்தியோகத்தர்களும் களத்திலிறங்கி வேலை செய்யத் தொடங்கினார்கள். ஒரே நாளில் அகதிகளைப் பாதுகாப்பான இடங்களில் சேர்க்கும் முயற்சிகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டன. இதனால் உயிரிழப்புகள் தவிர்க்கப்பட்டன. ஆனாலும் வீடுகளிலிருந்த உடைமைகள், கால்நடைகள் போன்றவற்றைப் பாதுகாக்க முடியவில்லை.

பாதுகாப்பான இடங்களில் சேர்க்கப்பட்ட மக்களுக்கான சமைத்த உணவு வழங்கல் தொடக்கம் படிப்படியாக ஏனைய அவசிய உதவிகளை பல்வேறு அமைப்புகளும் களத்திலிறங்கிச் செய்யத் தொடங்கின. உதவிப் பொருட்களைச் சேகரிப்பதும் வழங்குவதும் என்ற நிலையில் பணிகள் நடந்தன.

வெள்ள நிலைமைகளை துல்லியமாக வெளிப்படுத்தியதில் இந்தப் பிரதேசங்களில் செயற்படும் ஊடகவியலாளர்களின் பங்கும் முகநூல் பதிவர்களின் பங்களிப்பும் மிகப் பெரியது. இதனால் உடனடியாகவே வெள்ள அனர்த்தம் பற்றிய சேதிகள் வெளியே தெரியவந்தன. இதனையடுத்து பல்வேறு இடங்களிலும் பாதிப்புக்குள்ளான மக்களைக் குறித்த கரிசனை ஏற்பட்டது. அரசாங்கமும் இதையிட்டுக் கவனம் கொண்டு செயற்படத் தொடங்கியது.

அரசாங்கத்தரப்பிலிருந்து அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார 24.12.2018 அன்று கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு நேரில் பயணம் செய்து நிலைமைகளை ஆராய்ந்தார். கூடவே மக்கள் தங்கியிருந்த நலன்புரி நிலையங்களுக்கும் சென்றிருந்தார். அமைச்சர் வந்தபோது அவருடன் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களும் இணைந்து கொண்டனர். தொடர்ந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கான உணவுப் பொருட்கள் வழங்குவது தொடக்கம், தொற்று நோய்த்தடுப்பு முதற்கொண்டு அவசியமான பணிகளை மேற்கொள்வதற்கான கட்டமைப்பு செயற்படத் தொடங்கியது.

இதேவேளை தன்னார்வ முயற்சியாக அரசியல் கட்சிகள், பொது மக்கள், பொது அமைப்புகள், இளைஞர்கள், பல்கலைக்கழகங்களின் மாணவர்கள் எனப் பல தரப்பினரும் பல்வேறு உதவிப் பணிகளில் ஈடுபட்டனர். கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு அப்பால், வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு எனப் பல இடங்களிலிருந்தும் உதவிப் பொருட்களும் சேகரித்து அனுப்பப்பட்டன. இந்த இடங்களிலிருந்து உதவியாளர்களும் பாதிக்கப்பட்ட மக்களிடம் வந்து உதவத் தொடங்கினர். புலம்பெயர் நாடுகளிலிருந்தும் நிதிச் சேகரிப்பும் பொருட் சேகரிப்பும் மேற்கொள்ளப்படுவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

**கருணாகரன்**

இதனால் பாதிக்கப்பட்ட மக்கள் மனரீதியாகத் தெம்படைந்தனர். இவ்வளவு ஆதரவு கிடைக்கும் என யாரும் எதிர்பார்க்கவேயில்லை. தொடர்ந்தும் உதவிப் பொருட்கள் சேகரிக்கப்படுகிறது, வழங்கப்படுகிறது. களப்பணி என்பது எதிர்பார்க்கப்பட்டதையும் விட உச்சமாக இருக்கிறது என்றே கூற வேண்டும்.

அனர்த்தங்களின்போது இன, மத, மொழி, பிரதேச வேறுபாடுகள் எல்லாம் கரைந்தழிந்து மனிதாபிமானமும் அன்பும் கருணையும் மேலெழுகிறது. 2004 இல் சுனாமி அனர்த்தம் ஏற்பட்டபோதும் இதைப்போன்று எல்லோரும் ஒன்றிணைந்து உதவிப்பணிகளில் ஈடுபட்டிருந்தனர். அனர்த்தத்தின்போது மட்டுமல்ல, அழிவுகளிலிருந்து மீளெழுவதற்கான மீள் கட்டமைப்புக்கும் அந்த உதவிகளும் உதவிப் பணிகளும்கூடக் கிடைத்தன.

தற்போதைய உதவிகள் முதற்கட்டமாக உடனடிப் பாதிப்பிலிருந்து மீள்வதற்கானவை. குறிப்பாக உணவு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களே கிடைத்து வருகின்றன. வெள்ளம் வடிந்த பிறகே ஏற்பட்ட பாதிப்புகளின் முழுமையான விவரத்தை மதிப்பிட முடியும். அப்போதுதான் ஏற்பட்ட பொருளாதார இழப்புகளையும் உட்கட்டமைப்புச் சிதைவுகளையும் பற்றி அறியலாம். இப்போதைய அவதானிப்பில் வீதிகள், வயல் நிலங்கள், ஆறுகள், வாய்க்கால்கள், பாலங்கள் என உட்கட்டமைப்பு மோசமாகச் சிதைந்திருப்பதைக் காணமுடிகிறது.

இதைவிடக் கால்நடைகளின் உயிரிப்பு. பயிர்ச்செய்கை, வீடுகளின் சேதம் எனப் பெரிய பொருளாதார இழப்பும் ஏற்பட்டுள்ளது. இது மக்களின் வாழ்க்கையை மேலும் பத்தாண்டுகளைப் பின்னுக்குத் தள்ளப்போகிறது.

குறிப்பாக வெள்ளம் பாய்ந்த வயல்களின் நிலை மிக மோசமாக உள்ளது. இது நெற்செய்கைக் காலம் என்பதால் ஆயிரக்கணக்கான ஏக்கர் பயிர்கள் அழிவைச் சந்தித்துள்ளன. நூற்றுக்கணக்கான ஏக்கர் வயல் நிலப்பரப்பில் மணல் குவிந்திருக்கிறது. இதை அப்புறப்படுத்துவது லேசானதல்ல. அப்படித்தான் அகற்றினாலும் வயலின் நிலவளம் உடனடியாகச் சீராகும் என்றில்லை.

இதைப்போல ஒவ்வொன்றையும் மீள்நிலைப்படுத்துவதென்பது சாதாரணமானதல்ல. ஏற்கனவே இந்த மாவட்டங்களிலுள்ள வீதிகள், பாலங்கள் உட்படப் பலவும் முழுதாகப் புனரமைக்கப்படாமல் மிகுந்த சிரமங்களுடனேயே வாழ்ந்த மக்களுக்கு இது இரட்டைப் பாதிப்பாகும். இதைக் கவனத்தில் எடுப்பதே அரசாங்கத்தினதும் அரசியல் தலைவர்களினதும் பொறுப்பாகும்.

இதைக்குறித்து இப்போதே சிந்திக்க வேண்டும். இதையெல்லாம் இப்போது பேச முடியாது. இதைப் பற்றிப் பிறகுதான் பேச முடியும் என்றால் அவ்வளவுதான் கதை.

பிறகு இதைப்பற்றி யாருமே பேசப்போவதில்லை.

அவர்களுக்கு இதை விட வேறு சோலிகள் வந்து விடும்.

தொடர்ச்சி...

## ஞாயிறன்று கிழக்கு மாகாண ஆசிரியர் இடமாற்ற மேன்முறையீட்டுச்சபை:

இடமாற்றத்தை மீளாய்வு செய்யுமாறுகோரி மேன்முறையீடு செய்துள்ளனர். இது கவலைக்குரியது. அனைத்து ஆசிரியர்களும் தமக்கு சுகவீனம், தூரம் என்று காரணம்காட்டி வருகின்றனர்.


இந்நிலையில் கிழக்குக் கல்வி அபிவிருத்தியை எவ்வாறு முன்னெடுப்பது? பின்தங்கிய கல்குடா, மட்டு.மேற்கு வலய மாணவர்களுக்குக் கற்பிப்பது யார்? அவர்களுக்கு கல்விகற்கும் உரிமையில்லையா?

மேன்முறையீடுசெய்த பலர் திருமலைக்கு வந்து முறையிடுகின்றனர். அப்படி இங்கு வந்துதான் முறையிடவேண்டுமென்பதில்லை. அப்பீல் சபை யூடாக நேர்மையாக, நீதியாக மாணவர் கல்வி பாதிக்கப்படாவண்ணம் அதேவேளை ஆசிரியர் நலன்கருதி இடமாற்றம் இடம்பெறும். அதில் யாரும் சந்தேகப்படத்தேவையில்லை.

ஆளுநரின் அறிவுறுத்தலுக்கமைவாக இவ்வருடம் 760 ஆசிரியர்கள் இடமாற்றத்துக்குள்ளாகின்றனர்.

இவர்களுள் 313பேர் சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்து சுயவிருப்பத்தின் பேரில் விண்ணப்பித்து இடமாற்றம் பெறுபவர்கள். மீதி 447 ஆசிரியர்கள் கஸ்ட அதிகஸ்ட பிரதேசங்களில் கடமையாற்றாதவர்கள் அல்லது ஏற்கனவே அக்காலத்தை முற்றாக பூர்த்தி செய்யாதவர்களாவர். இந்த 447 பேரில் 99வீதமானோர் மேன்முறையீடு செய்துள்ளனர்' என்றார்.

# படுவான்கரை ஊடாக ஒரு நெடுஞ்சாலை வேண்டும்



மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது 3 பிரதானவீதிகள் காணப்படுகின்றன. அவையாவன:

1. மட்டக்களப்பிலிருந்து எழுவான்கரை ஊடாக கல்முனை செல்லும் வீதி. (இவ்வீதி கொழும்பு – மட்டக்களப்பு வீதி)

2. செங்கலடியிலிருந்து பெரியபுல்லுமலை செல்லும் வீதி. (பதுளை வீதி)

3. மட்டக்களப்பிலிருந்து வாகரை ஊடாக திருகோணமலை செல்லும் பிரதானவீதி

1070 சதுரமைல் பரப்பளவினை உடைய மட்டக்களப்பு மாவட்டத்தின் மட்டக்களப்பு நகரிலிருந்தான தெற்குப்பிரதேசத்தினை



42 சதுரமைல் பரப்பினை உடைய மட்டக்களப்பு வாவி இரண்டு கூறுகளாகப் பிரிக்கின்றது. இவற்றுள் வாவியின் கிழக்குப்பகுதியில் உள்ளபிரதேசம் எழுவான்கரை என்றும் மேற்குப் பகுதியில் உள்ளபிரதேசம் படுவான்கரை என்றும் பன்னெடுங்காலமாக அழைக்கப்பட்டு வருகின்றன. இதில் மட்டக்களப்பில் இருந்து எழுவான்கரை ஊடாகக் கல்முனை செல்லும் பிரதான வீதி 1923 ஆம் ஆண்டு, கல்லடிப்பாலம் அமைக்கப்பட்டது முதல் படிப்படியாக அபிவிருத்தி செய்யப்பட்டு இன்று கார்பட் வீதியாக மிளிர்கின்றது. ஆனால் படுவான்கரையில் இவ்வாறான ஒரு வீதி ஒரே வீதியாக, ஒரே பெயரில் ஒரே நிருவாகத்தின் கீழ் இல்லை. இது ஒரு பாரிய குறைபாடாக இனம் காணப்பட்டுள்ளது. இக்குறைபாடு நீக்கப்பட வேண்டும் என்பதே எமது ஆதங்கம்.

படுவான்கரையில் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு ஒரு கிராமத்திலிருந்து பக்கத்தில் உள்ள கிராமங்களுக்குச் செல்வதற்காக அமைக்கப்பட்ட வீதி அமைப்புக்களையே இப்போதும் கொண்டிருக்கிறோம். எனவே இவ் வீதியை அகலப்படுத்தி கார்பட் வீதியாக அபிவிருத்தி செய்யப்படும்போது வீதி அமைப்புக்களில் ஏதேனும் மாற்றங்கள் செய்ய முடியுமா என்பதுபற்றி பொறியிலாளர்கள் சிந்திக்கவேண்டும். உதாரணமாக மட்டக்களப்பு கல்லடி மணிக்கூட்டுக் கோபுரச் சந்தியிலிருந்து மண்முனைச்சந்தி (தாழங்குடா) வரையில் தற்போது பிரதான வீதியாகப் பயன்படுத்தப்படும் வீதி முன்பு இருந்ததில்லை. மேற்படி மணிக்கூட்டுக்கோபுரச் சந்தியிலிருந்து வாவிக்கரை ஓரமாக மண்முனைச் சந்திவரை செல்லும் வீதியே பிரதான வீதியாக முன்பு பயன்படுத்தப்பட்டு வந்தது. பின்புதான் தற்போதுள்ள பிரதான வீதி பயன்பாட்டிற்கு வந்தது. இதேபோன்று படுவான்கரையின் 42 கிலோமீற்றர் நீள வீதியின் அமைப்பிலும் மாற்றங்கள் செய்யப்படவேண்டுமா என்பது பற்றிச் சிந்திக்கப்படவேண்டும்.

மக்கள் தொகை அதிகரிப்பும் அவர்களது தேவைகளும் தொடர்புகளும் அதிகரித்துவிட்ட இக்காலகட்டத்தில் அதற்கேற்ப மாற்றங்களும் அவசியமாகின்றன. தற்போது மட்டக்களப்பில் இருந்து தம்பலவத்தை வரை பயன்படுத்தப்படும் மேற்படிவீதி 42 கிலோமீற்றர் நீளமுடையதாகும். இவ் வீதி முழுவதும் மட்டக்களப்பு மாவட்டத்தினுள்ளேயே அடங்கி உள்ளது. மட்டக்களப்பிலிருந்து புதூர், வலையிறவுப்பாலம், வவுணதீவுச்சந்தி, மண்டபத்தடி, குறிஞ்சாமுனை, மணற்பிட்டிச்சந்தி, (கொக்கட்டிச்சோலை) வால்கட்டுச்சந்தி, தாமரைப்பூச்சந்தி (அம்பிளாந்துறை), தும்பங்கேணிச்சந்தி, பிலாலிவேம்பு, வெல்லாவெளி, மண்டூர், பாலமுனை, தம்பலவத்தை, என நீண்டு செல்கின்றது இவ்வீதி. நீண்ட பிரதேசத்தினை ஊடறுத்துச் செல்லும் இவ் வீதியில் 07க்கு மேற்பட்ட பெயர்களுடன் வீதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் வீதி அபிவிருத்தி திணைக்களம் என இரண்டு நிருவாகங்களின் கீழ் வருகின்றது. அவை பற்றிய விபரம் பின்வருமாறு:

மேற்படிவீதிகள் அனைத்துமே Grade வீதிகள் ஆகும். எனவே மேற்படி 07 வீதிகளையும் ஒரே பெயரில் ஒரே வீதியாக வர்த்தமானி மூலம் அங்கீகரித்து, அதற்கு B Grade கொடுப்பதுடன் வீதிக்கு பெயரொன்றையும் இட்டு வீதிக்கான இலக்கமும் கொடுக்கப்படவேண்டும். இவ்வீதிக்கு மட்டக்களப்பு படுவான்கரை பிரதானவீதியெனப் பெயரிடலாம்.

| No | Code No | RMMS Code No | வீதிகளின் பெயர்கள் | நிர்வாகம் |
|---|---|---|---|---|
| 01 | BT 11 | | [illegible] | RDD |
| 02 | BT 21 | EPC 057 | [illegible] | RDD |
| 03 | BT 02 | EPC 090 | [illegible] | RDD |
| 04 | BT 20 | EPC 084 | [illegible] | RDD |
| 05 | BT 62 | EPC 027 | [illegible] | RDD |
| 06 | | | [illegible] | RDD |
| 07 | | | [illegible] | RDA |

மேற்படி வீதியில் அகல வழிப்பாதை அமைப்பதில் பிரச்சினை குறைவு என்பதால் 4 வழிச் சாலையாக இதனை நிர்மாணித்து அவற்றுள் இரண்டு வழித்தடத்தினை கடுகதி நெடுஞ்சாலையாக அமைப்பதன் மூலம் தற்போது மட்டக்களப்பு கல்முனை வீதியில் இடம்பெறும் விபத்துக்களை பெருமளவு குறைக்க முடியும். இப்போதே இன்னும் 33 வருடங்களை தூர

துறைநீலாவணை தங்கராஜன்
(சமூகச்செயற்பாட்டாளர்)

நோக்குடன் சிந்திப்போமாக இருந்தால் 06 வழிச் சாலையாக அமைப்பதே உகந்த செயற்பாடாகும். ஏனெனில் புவிச்சரிதவியல் விஞ்ஞானிகளின் கூற்றுப்படி 2050ம் ஆண்டளவில் மட்டக்களப்பிலிருந்து கல்முனை வரையுள்ள எழுவான்கரை கிராமங்கள் அனைத்தும் நீரில் மூழ்கிவிடுமென எதிர்வு கூறப்படுகின்றது. அந்தளவிற்கு பூமியின் வெப்பநிலை அதிகரித்து கடல் மட்டம் உயரும் எனவும் கூறப்படுகின்றது.

முன்மொழியப்படும் இவ்வீதி அமைக்கப் படுகையில் எடுத்தேன் கவிழ்த்தேன் என்ற மாதிரி இல்லாமல் தூர நோக்குடன் முறையாக திட்டமிட்டு செய்யப்படவேண்டும். இவ்வீதி கடுக்காமுனை குளத்தினை ஊடறுத்துச் செல்கின்றது. குளத்தின் நீர்ப்பிடிப்பு பகுதி வீதியின் மேற்குப்பக்கமாக உள்ளதால் மழைநீர் குளத்திற்கு வரக்கூடியதாக ¼ கிலோ மீற்றர் தூரம் ஓந்தாச்சிமடத்தில் உள்ளது போன்று 5அடி உயரமான மேம்பாலம் அமைக்கப்படவேண்டும். மற்றப்படி நீர் வழிந்தோடக்கூடிய மாதிரி கோஸ்வே அமைக்கப்படக் கூடாது. மேற்படிவீதியின் மணற்பிட்டிச் சந்தியிலிருந்து தெற்கேவால்க்கட்டுச் சந்தி வரையான 2.2 கிலோமீற்றர் நீளமான கற்பாதை போன்று ஒரு வீதியினை இலங்கையில் வேறு எங்குமே காணமுடியாது. இந்தஇடத்திலேதான் கிழக்கின் உள்நாட்டுயுத்தம் மையம்

தொடர்ச்சி... (பக்கம் -12 )

## வேல் வழிபாடு

# இலங்கையில் வேல் வழிபாடு

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள பல முருகன் கோயில்களில் இதற்கான சான்றுகள் காணப்படுகின்றன. 1876 ஆம் ஆண்டளவில் அமைக்கப்பட்ட வண்ணார்பண்ணை ஸ்ரீ கதிரேசன் கோவிலின் மூலமூர்த்தியாக வேல் 1979 ஆம் ஆண்டு வரை இருந்துள்ளது. யாழ்ப்பாணத்திலுள்ள வேலணை தெற்கு ஸ்ரீ சிவசுப்பிரமணியர் கோவில், நயினாதீவு காட்டுக் கந்தசுவாமி கோவில், வேலணை முருகமூர்த்தி கோவில், கரம்பன் மேற்கு ஸ்ரீ முருகமூர்த்தி கோவில்,பருத்தியடைப்பு ஊர்காவற்துறை ஸ்ரீ கதிரேசன் கோவில், முத்தன்காடு எழுவைதீவு ஸ்ரீ முருகன் கோவில், இருபாலை – கோப்பாய் கதிர்காம சுவாமி கோவில் (1890 ஆம் ஆண்டு கதிர்காமத்தில் இருந்து கொண்டு வரப்பட்ட வேல் இவ்வாலயத்தின் மூலஸ்தானத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது.) என்பவற்றிலும்மூலமூர்த்தி வேல். மாவிட்டபுரக் கந்தசுவாமி கோவிலிலும் ஆதியில் மூலஸ்தானத்தில் வேலே வைக்கப்பட்டு வழிபடப்பட்டது, பின்னர் சிலாசன மூர்த்தி பிரதிஷ்டை பண்ணப்பட்டபோதும் சிலாசன மூர்த்திகளுடன் வேலும் வைக்கப்பட்டுள்ளது.

கிழக்கிலங்கையில் அமைந்துள்ள தொன்மையான முருகன் கோவில்களிலும் இதற்கான சான்றுகள் காணப்படுகின்றன. மட்டக்களப்பில் வெருகல்,சித்தாண்டி, கோயில் போரைதீவு, திருக்கோவில் ஆகிய இடங்களிலுள்ள முருகன் கோயில்கள் சித்திரவேலாயுதர் கோவில்கள் என்றே குறிப்பிடப்படுகின்றன. தங்கேஸ்வரி அவர்கள், 'தமிழகத்தில் அறுபடைவீடு என ஆறு பிரபல முருகத்தலங்கள் அழைக்கப்படுவது போல மட்டக்களப்பில் முருகனின் திருப்படையான வேல் பிரதிஷ்டை செய்யப்பட்ட கோயில்கள் திருப்படைக் கோயில்கள் ஆகின.'எனக் குறிப்பிடுகிறார்.

தங்கேஸ்வரி அவர்கள் மட்டக்களப்பிலுள்ள முருகன் கோவில்களின் வளர்ச்சி பற்றி விபரிக்கும் செய்திகள் கவனத்திற்குரியன. இங்குள்ள கர்ணபரம்பரைக் கதைகள், சூரபத்மனை அழித்த வேலானது பின் வாகூர மலையை இருகூறாகப் பிளந்து உக்கிரம் தனியாமல் கடலில் மூழ்கியபோது அவ்வேலிலிருந்து மூன்று பொறிகள் தோன்றி வேல்களாயின. அவை திருக்கோயில், உகந்தை, மண்டூரில் தங்கின. அவற்றை ஆதாரமாகக் கொண்டே அவ்விடங்களில் முருகன் ஆலயங்கள் தோன்றின. உகந்தை முருகன் கோயில் 1885 ஆம் ஆண்டு மார்க்கண்டு எனும் முதலாளியால் கட்டப்பெற்றது எனவும் அதற்கு முன்பு வேல் மட்டுமே இருந்துள்ளது எனவும் கூறப்படுகிறது.(19)



வெருகலில், ஆலமரத்தின் கீழ் வேடர்கள் வேல் வைத்து வழிபடப்பட்ட இடமே பிற்காலத்தில் முருகன் கோயிலாக அமைக்கப்பட்டது என்பது அங்கு நிலவும் கர்ணபரம்பரைக் கதையாகும். பிற்காலத்தில் முருகன், வள்ளி, தெய்வானை விக்கிரகங்கள் மூலஸ்தானத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டன. சித்தாண்டியில் சிகண்டி முனிவர் வேல் நட்டு வழிபட்ட வந்த இடமே சித்தாண்டியானது என்பது அங்கு நிலவும் கர்ணபரம்பரைக் கதையாகும். இக் கர்ணபரம்பரைக் கதைள், முன்னர் வேல் வழிபாடு நடைபெற்ற இடங்களே

கிரான் விஜய்

மட்டக்களப்பில் தொல் முருகன் கோயில்களாக வளர்ச்சி பெற்றன என்பதனைக் காட்டுகின்றன.

வெருகல் முருகன் கோயில் பற்றிய களத்தகவல்கள் அரிய செய்திகளைத் தருவதாயுள்ளன. வெருகல், தொல் ஈமத்தாழிகள் கண்டெடுக்கப்பட்ட கதிரவெளியின் அருகே உள்ள இடமும் கூட. இலங்கைத்துறைமுகம் எனும் கிழக்கிலங்கையின் பண்டைத்துறைமுகமும் வெருகலின் அருகேதான் உள்ளது.வெருகல் முருகன் கோயில் தொடர்பாக மக்கள் மத்தியில் நிலவும் கதையில், 'தற்போது இவ்வாலயம் இருக்குமிடத்திலே ஒரு ஆலமரம் இருந்தது எனவும் அம்மரப் பொந்திலே ஒரு வேல் இருந்ததாகவும் அதனை வேடர் (குவேனி வம்சத்து வேடர்கள்) வழிபாடு செய்து வந்ததாகவும் கூறப்படுகிறது. அவ்வழியே யாத்திரை செய்த செட்டியார் ஒருவர் இவ்விடத்தில் தங்கியபோது முருகன் கனவில் தோன்றி அவ்விடத்தில் ஒரு ஆலயம் அமைக்கும்படி கூற, அதன் படியே செட்டியார் இவ்வாலயத்தை அமைத்தாகவும்...' என்ற விபரங்கள் வெருகலில் தொன்மையில் வேல் வழிபாடு நிலவியதைக் காட்டுகிறது.

வெருகல் முருகன் கோவிலில் வேல் வழிபாடு, தொல் முருக வழிபாடு, ஆகம முறை முருக வழிபாடு என்ற மூன்றும் தனித்தனியாக காணக்கூடியதாக இருக்கிறது. கோவிலின் முன்புறத்தே தனியானதொரு வேல் வழிபாட்டிடம் இங்கு இன்றும் காணப்படுகிறது. கதிர்காமக் கந்தன் ஆலயம் (கதிர்காம தெய்யோ கோவில்) தொல் முருக வழிபாட்டிடமாக விளங்குகிறது. தற்போதுள்ள முருகன் கோவில் ஆகம முறையிலமைந்த கோவிலாகும். இதில் ஆகம முறைப்படியான வழிபாடு நடைபெறுகிறது.

சமஸ்கிருதமயப்பட்ட - ஆகம முறைப்படி மாற்றப்பட்ட முருகன் ஆலயங்களில் மூலஸ்தானத்தில் முருகன் அன்றி வேல் வைக்கப்பட்டு வழிபடப்படுகிறது என்பது சாதாரணமானதொன்றல்ல. அம்மக்களுடைய பண்பாட்டில் இன்னமும் வேல் முக்கியத்துவமுடையதாக கருதப்படுவதையே இது எடுத்துக்காட்டுகிறது. சமஸ்கிருதமயப்பட்ட - ஆகம முறைப்படி மாற்றப்பட்ட முருகன் கோவில்களில் வேல் மூலஸ்தானத்தில் வைக்கப்பட்டுள்ளது என்பது சமஸ்கிருதமயமாக்கத்திற்கெதிரான மற்றொரு பரிணாமாகிறது.

இவ்விடத்து இரா.வை.கனகரெத்தினம்

தொடர்ச்சி... (பக்கம் -15)

# படுவான் திசையில்

பக்க அனுசரணையாளர்:
அலையப்போடி நல்லரத்தினம்(அதிபர்)
அறிவாலயம் பவுண்டேசன்
மற்றும் வாழ்நாள் நன்கொடையாளர் சக்தி இல்லம்.

## பாரம்பரிய மருத்துவ முறைகளும் பரியாரிமாரும் அருகும் நிலை

படுவான் பாலகன்

‘ஒரு இனத்தின் தொன்மையினை பறைசாற்றுவதாக பண்பாடுகள் அமைந்துள்ளன. பண்பாடுகளை அழிப்பதன் மூலமாக ஒரு இனத்தினை அழித்துவிடலாம்’ என சின்னதம்பி கூறினான். கொக்கட்டிச்சோலை கலாசார மண்டபத்தின் முன்நின்று நல்லதம்பியிடம் சின்னத்தம்பி பேசிக்கொண்டிருக்கையிலேயே இதனைக் குறிப்பிட்டான்.

செம்மொழியாகிய தமிழ்மொழியை தாய்மொழியாக கொண்ட தமிழர்களது, பண்பாடுகள் நீண்ட வரலாற்றினைக் கொண்டவை. இதனால்தான் தமிழர்களது பண்பாடுகள் இன்றைவரை மதிக்கப்படுவதுடன், தமிழர்களும் எல்லா நாடுகளிலும் பரந்தும் இருக்கின்றார்கள். இலங்கை நாட்டின் ஆதிக்குடியாக தமிழர்கள் இருந்தார்கள் என்பது வரலாறு. இவ்வரலாற்றுக்கதைகள் புத்தகங்கள், தடயங்கள் மூலமாக எடுத்துச் சொபல்லப்பட்ட அதேவேளை வாய்மொழி மூலமாகவும் கூறப்பட்டுவந்தது. நவீன வசதிகளின் ஆக்கிரமிப்பு, மற்றவர்களுடன் சேர்ந்துபேசுவதற்கு நேரமொதுக்காது, தற்போதைய சிறுவர்களும், இளைஞர்களும் ஓடிக்கொண்டிருப்பதனால், வாய்மொழிமூலக் கதைகளினூடான வரலாற்றுக்கதைப்பரப்புரை நிறுத்தப்பட்டிருக்கின்றது என்றே கூறமுடியும். இப்பாதக நிலை ஏனையவர்களுக்கு சாதகமாக்கப்பட்டு, தமிழர்களது தடயங்களும், வரலாறுகளும் வேறுவேறாக திரிபுபடுத்தப்பட்டு, தமிழ்பெயர்களும் மாற்றப்பட்டுவருகின்றதான வேதனைச் சம்பவங்களும் நடந்தேறிவருகின்றன. இச்சூழலில், இருக்கின்ற பண்பாடுகளையும், தடயங்களையும் வரலாறுகளையும் காக்கவேண்டியதும், கடத்தவேண்டியதுமான அவசியத்தில் இலங்கைத்தமிழர்கள் இருந்துகொண்டிருப்பதாக கூறினான் சின்னத்தம்பி.

இலங்கை நாட்டிலும் வடக்கு, கிழக்கில் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற அதேவேளை ஏனைய மாகாணங்களிலும் ஆங்காங்கு வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இவ்வாறு வாழ்கின்ற மக்கள் தமது பண்பாடுகளையும் இயன்றளவு பேணிவருகின்றனர். கிழக்கு மாகாணத்தில், மட்டக்களப்பு மாவட்டத்திலேயே அதிகளவிலான தமிழர்கள் தற்காலச்சூழலில் வாழ்கின்றனர். இங்குள்ள இரண்டு கரைகளிலே, படுவான்கரையில் உள்ள மக்கள்தான் தமிழர்களது பண்பாடுகளை அதிகம் நேசிப்பவர்களாகவும், இன்றைவரை பாதுகாத்தும், பேணியும் வருகின்றனர். இப்பிரதேச மக்கள், 2007ம் ஆண்டிற்கு முன்னர் பாரம்பரிய வைத்தியமுறை, கலை, உணவு, உடை, சடங்கு என்பவற்றோடு தனித்துவமாக வாழ்ந்தனர். ஆனாலும் 2007ம் ஆண்டு இங்குள்ள மக்கள் இடம்பெயர்ந்து மீண்டும் குடியமர்த்தப்பட்ட பின்னர், ஏற்கனவே இருந்த சூழலுக்கும் பின்னரான சூழலுக்கும் இடையே வித்தியாசமொன்று குறிப்பாக அச்சமானநிலை மக்களிடத்திலே இருந்தமையினால், பாரம்பரிய கலை, சடங்கு போன்றவை 2010வரையும் சிறப்புப்பெற்றதாகவில்லை. பின்வந்த ஆண்டுகளில் பாரம்பரிய கலைகள் கிராமங்கள்தோறும் ஆற்றுகைசெய்யப்பட்டு அரங்கேறியதுடன், இற்றைவரை அச்செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. கலைரீதியான செல்வாக்கு மேலோங்கியுள்ளது எனக்குறிப்பிட்டாலும்கூட, பாரம்பரியமாக செய்யப்பட்டு வந்த மருத்துவமுறை குறிப்பாக விஷக்கடி வைத்தியம், சித்தமருத்துவம், மருத்துவிச்சுகளால் முன்னெடுக்கப்பட்ட பிரசவம் பார்த்தல் போன்ற செயற்பாடுகள், நவீன வசதிகளின் காரணமாக ஓரங்கட்டப்பட்டுள்ளன. பல்கலைக்கழகங்கள் சென்று பட்டங்கள் பெற்றிராவிட்டாலும், அனுபவத்திலே பல பட்டங்களை பெற்று பல உயிர்களை காப்பாற்றியவர்களாகவும், முழுமையான சுகப்பிரசவங்களையே இலவசமாகவும்,



மனிதநேயத்துடன் பார்த்தவர்களாகவும் பாரம்பரிய வைத்தியர்கள் இருந்தனர். பாரம்பரியமாக படுவான்கரைப் பிரதேசத்தில் பயன்படுத்தப்பட்டு வந்த வீட்டுப்பொருட்கள், விவசாயப்பொருட்கள், ஏனையத்தொழில் பொருட்கள் போன்றன நாள்தோறும் விற்கப்பட்டு வருகின்றன. இப்பொருட்கள் அனைத்துமே தமிழர்களது வரலாற்றினை ஆதாரப்படுத்தும் பொருட்களாகும். இவை இன்னோர் சமுகத்துடன் செல்லுகின்றபோது, அச்சமுகம் அதனை தாம் பயன்படுத்திய பொருட்கள் எனக்கூறி தமது வரலாற்றை எதிர்வரும் காலங்களில் நீட்டிச்செல்லக்கூடிய வாய்ப்பும் உள்ளது. அதேநேரம் வரலாற்று ரீதியாக இங்குள்ள மக்கள் பின்நிலையை அடையக்கூடியதுமான சந்தர்ப்பமுள்ளது. பாரம்பரியபொருட்களை பொதுவான இடத்தில் வைத்து பாதுகாக்கக்கூடிய முடியற்சிகளை மேற்கொள்ளாமை வேதனையளிக்கின்றது. அவை பாதுகாக்கப்பட்டிருந்தால், இளந்தலைமுறைக்கு அவற்றினை கடத்தியிருக்கமுடியும். தற்போதும் தந்தைக்கு தெரிந்த பொருட்கள், தந்தைபயன்படுத்திய பொருட்கள் மகனுக்கு தெரியாத நிலையே காணப்படுகின்றது. பேச்சளவில் பலராலும் கூறப்பட்ட ஆவணமாக்கல் பெரியளவில் நடைமுறைக்கு சாத்தியமாக்கப்படாமை துர்ப்பாக்கியமே என்றான் சின்னத்தம்பி.

பாரம்பரிய பொருட்களை அழியவிட்டவர்களாவும், பாரம்பரிய வைத்திய முறைகளை கைநழுவவிட்டவர்களாவும், பாரம்பரிய உணவுப்பழக்கத்திலிருந்தும்; சிறிது சிறிதாக விடுபட்டு, நாகரீக உணவு என்ற ரீதியில், நோய்களை தேடிக்கொள்ளும் சூழலிலும், ஆலயதரிசனம், பொது நிகழ்வுகளில் பண்பாட்டு உடைகளை பேணிவரும் அதேவேளை பாரம்பரிய கலைகள் மாத்திரம் ஓரளவு செல்வச்சிறப்பு பெறுகின்றன. இச்சிறப்பு இன்னமும் மேலோங்குவதற்கு, நீடித்து நிலைப்பதற்கு கலைஞர்களுக்கான வசதி வாய்ப்புக்கள் என்பதும் அவசியமாகின்றது. இன்று கலைஞர்களாக இருப்பவர்கள் வீட்டிலே பல சொல்லொண்ணாத்துயர்களை எதிர்கொண்டு வருகின்றனர். ஆனபோதும் தமது கலையின்பாலான ஈர்ப்பினால் வேதனையையும் தாங்கி சிரிப்புடன் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர்.

இந்தப்பிரதேசத்திலே 500க்கு மேற்பட்டவர்களுக்கு இலவசமாக பிரசவம் பார்த்த மருத்துவிச்சி ஒருவர் இறந்தபோது, அவரினை அடக்கம் செய்வதற்குகூட அக்குடும்பத்தால் முடியாதளவு வறுமைநிலை காணப்பட்டிருந்தது. இதனால் அக்கிராமத்தின் இளைஞர்கள் ஒன்று சேர்ந்து அம்மருத்துவிச்சிக்கான இறுதிக்கிரியைகளை மேற்கொண்டனர். உண்மையில் பண்பாடுகளையும், பாரம்பரியங்களையும் பேணிப் பாதுகாத்துக்கொள்பவர்கள் தமக்காக எதனையும் வேண்டிக்கொள்வதில்லை. இதனால்தான் எமது பிரதேசத்தில் உள்ள பல கலைஞர்களின் வீட்டில் வறுமை குடிகொண்டுள்ளது. எனவே தமிழ் இனத்தின் இருப்பினை நிலைநிறுத்தும் கலைஞர்களுக்கு சிறந்த கௌரவத்தினை வழங்குவதுடன், குடும்ப வாழ்வாதாரத்தினையும் மேம்படுத்த அனைவரும் முயற்சிக்க வேண்டும்.

## தன்னம்பிக்கையே வெற்றி தரும்...



சகி

கடந்த வாரம் அதிகாலையில் எழும்புவது எந்த விதத்தில் உங்கள் வெற்றிக்கு உதவும் என்பதை பற்றி கூறியிருந்தேன். இந்த வாரம் உங்கள் தன்னம்பிக்கையை எப்படி வளர்த்துக் கொள்வது என்பது பற்றி கூறுகின்றேன்.

தன்னம்பிக்கை (self confidence) இல்லாமை என்பதே நம்மில் பலரின் தோல்விகளுக்கு காரணமாய் இருக்கிறது.

நமக்கு நம் உடல் உறுப்புகள் எவ்வளவு அவசியமோ அதே அளவு தன்னம்பிக்கையும் அவசியம்.

உடல் உறுப்புகள் இல்லாதவர்கள் பலர் வாழ்கையில் சாதனையின் உச்சத்தை அடைந்துள்ளார்கள், காரணம் என்னவென்றால் என்னால் முடியும் என்ற தன்னம்பிக்கை அவர்களிடம் இருந்தது.

அமெரிக்க நாட்டின் மிகச்சிறந்த எழுத்தாளரான edgar allan poe என்பவர் "எனக்கு முட்டாள்களின் மீது அதிக நம்பிக்கை உண்டு, அதை என் நண்பர்கள் தன்னம்பிக்கை என்று அழைக்கிறார்கள்" என்று கூறுகிறார். நம்முடைய செயல்களில் நம்பிக்கை வேண்டும், நான் சரியானதைத்தான் செய்கிறேன் என்பதே அந்த நம்பிக்கை. அது தான் தன்னம்பிக்கை. நீங்கள் தன்னம்பிக்கையை(Self confidence) வளர்த்துக் கொள்ள சில வழிகள் சொல்கிறேன். இது மருத்துவம் சம்மந்தமான ஆலோசனைகள் அல்ல. இது உளவியல் தொடர்பான நமது தேவைகள்தான்.

1. முதல் வழி மற்றவர்களுடன் உங்களை ஒப்பிட்டு பார்க்காதீர்கள்.

நாம் எல்லோரும் செய்யும் தவறு இது. மற்றவர்களுடன் நம்மை ஒப்பிட்டு பார்ப்பது. உங்களோடு படித்த ஒருவர் உங்களை விட பெரிய வேலை, உயர்ந்த அந்தஸ்தில் இருக்கும் போது, நீங்கள் அவரை பார்த்து, அவரோடு உங்களை ஒப்பிட்டு, உங்களை நீங்களே தாழ்த்திக் கொள்கிறீர்கள்.



அப்படி செய்யாதீர்கள் ஏனென்றால் ஒவ்வொருவரின் குடும்ப சூழல் மற்றும் பொருளாதார நிலைமைகள் வேறுபட்டவை. உங்கள் நிலையில் நீங்கள் எவ்வளவு முயற்சிகளை செய்கிறீர்கள் என்பதில் மட்டும் கவனம் செலுத்துங்கள். அதை விடுத்து மற்றவர்களுடன் உங்களை ஒப்பிட்டு பார்ப்பதை நிறுத்துங்கள்.

2. தயங்காமல் பிரச்சினைகளுக்கு முகம் கொடுங்கள். பிரச்சினைகள் வரும் போது ஓடி ஒழியாதீர்கள் மாறாக அதை எப்படித் தீர்ப்பது என்ற வழியை கண்டு பிடியுங்கள். தீர்வு இல்லாத பிரச்சினை என்று எதுவுமே இல்லை. ஒரு முறை பிரச்சினையை எதிர்த்து நின்று தீர்வை கண்டு பிடித்து பாருங்கள், நிச்சயமாக சொல்கிறேன் அதன் பின் உங்கள் மீது நீங்களே அசைக்க முடியாத ஒரு நம்பிக்கையை வைப்பீர்கள். பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கும் போது என்னால் எதுவும் முடியும் என்ற தன்னம்பிக்கை உருவாகும்.

3. உங்கள் பலவீனங்களை கடந்து வாருங்கள். ஒவ்வொருவருக்கும் ஏதோ ஒரு விடயம் அவர்களது பலவீனமாக இருக்கும். அதைக் கடந்து வர முயற்ச்சி செய்யுங்கள். அதாவது சிலர் அதிகம் பேசுவார்கள் சிலர் பகலில் தூங்குவார்கள். சிலர் எந்நேரமும் தேநீர் குடிக்கும் பழக்கம் உடையவராக இருப்பார்கள். இது போன்ற உங்களது பலவீனங்களை கட்டுப்படுத்தி பாருங்கள். உதாரணமாக உங்களுக்கு பகலில் தூங்கும் பழக்கம் இருந்தால் அதை குறைந்தது ஒரு மாதத்திற்கு செய்யாமல் விட்டுப் பாருங்கள், அப்போது அடடா என்னுடைய நீண்ட கால பழக்கத்தை என்னால் விட முடிகிறதே, அப்படியென்றால் என்னால் எதையும் செய்ய முடியும் என்ற தன்னம்பிக்கை உங்களுக்கு வரும்.

4. உங்கள் தோற்றத்தில் மற்றும் நடத்தையில் கவனம் செலுத்துங்கள். உடைகளை தெரிவு செய்யும் போது மற்றவர்கள் என்ன நினைப்பார்கள் என்று யோசிப்பதை விட்டு எனக்கு எது பொருத்தமாக இருக்கும், எந்த உடையில் நான் சிறப்பாக தெரிவேன் என்பதில் கவனம் செலுத்துங்கள். உங்கள் தோற்றத்தில் உங்களுக்கு திருப்தி இருந்தால் தான் உங்களால் எந்த செயலையும் சரியாக செய்ய முடியும். ஒருவரிடம் பேசும் போது நிமிர்ந்து நின்று தாடையை உயர்த்தி கண்களை பார்த்து பேசுங்கள். அது உங்களை தன்னம்பிக்கை உள்ளவராய் காட்டும். ஆங்கிலத்தில் ஒரு கூற்று உண்டு "Chin up, eyes forward, keep moving" என்று. அதன் அர்த்தம் தாடையை உயர்த்தி, பார்வையை நேராக்கி, முன்னேறி செல்லுங்கள் என்பதேயாகும். இந்த வார்த்தையை அடிக்கடி மனதிற்குள் கூறிக் கொள்ளுங்கள், அது உங்கள் தன்னம்பிக்கையை வளர்க்கும்

5. உங்கள் பயத்தை போக்குங்கள்.

நீங்கள் ஒரு செயலை செய்யத் தொடங்கும் போது பெரும்பாலும் உங்களை சார்ந்தவர்களிடம் இருந்து எதிர்மறையான கருத்துக்களை தான் கேட்பீர்கள். ஆனால், நீங்கள் உங்கள் முடிவில் உறுதியாக இருங்கள்; உங்களது முடிவு சரியானது என்ற நம்பிக்கை உங்களுக்கு இருக்க வேண்டும்.

மற்றவர்களின் கருத்துக்களை கேட்கும் போது நான் செய்வதோ தவறோ என்ற பயம் உங்களுக்கு வர கூடும். ஆனால் அந்த பயத்தை அடித்து நொறுக்கி விட்டு தன்னம்பிக்கையை அங்கு நிறுத்துங்கள். அப்படி பயந்தீர்கள் என்றால் அது உங்களை தோல்வியை நோக்கி துரத்திக் கொண்டே போகும். தீர்க்கமான முடிவு எடுத்தபின் பயத்திற்கு இடம் கொடுக்காதீர்கள். தன்னம்பிக்கையோடு நிமிர்ந்து நில்லுங்கள். வெற்றியை நோக்கி முன்னேறுங்கள்

# தென்னன் மரபு அடி [தென்னமரபாடி] – பறிபோகும் தமிழர் இதய பூமி

## பாராமுக தமிழர் அரசியல் தலைமைகள்

தென்னன் மரபு அடி கிராமம் திருக்கோணமலையையும் முல்லைத் தீவையும் இணைத்து நிற்கும் தமிழரின் பூர்வீகக் கிராமமாகும். இணைந்த வடகிழக்கு தமிழர் தாயகப் பிரதேசமெனின் அந்த தாயக நிலத்தில் தென்னன் மரபு அடி கிராமம் தான் இணைப்பின் மையப்புள்ளி. வடகிழக்கின் செல்வச் செழிப்பு மிக்கதாக விளங்கிய இக்கிராமத்தில் 1984 ஆம் வருடத்தில் சிங்கள பெரும்பான்மையினரின் திட்டமிட்ட படுகொலையொன்றின் பின்பாக மக்கள் முற்றுமுழுதாக இடம்பெயர்ந்து முல்லைத்தீவு மாவட்டத்தில் தஞ்சமடைந்து வாழ்ந்து வருகிறார்கள்.

2011 ஆம் ஆண்டின் பின்பு சுமார் 150 குடும்பங்கள் மீளக்குடியேறினாலும் தொழில் வாய்ப்புக்கள் இன்மை, வருமானமின்மை, சிறார்களுக்கான கல்வி வாய்ப்பின்மை மற்றும் மருத்துவ வசதிகள் இன்மை போன்ற காரணங்களால் மீளவும் முல்லைத்தீவை நோக்கி திரும்பி விட்டனர். தற்போது சுமார் 85 குடும்பங்கள் வீட்டு வசதிகள் கிடைக்கப்பெற்று வாழ்ந்து வருகின்றனர். இவர்களில் பெரும்பான்மையானோர் வயது முதிர்ந்தவர்களாவர். முல்லைத்தீவின் பொன்னகர் எனும் கிராமத்தில் தென்னமரபாடியைச் சேர்ந்த 150 குடும்பங்கள் இன்னும் வாழ்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

விவசாயம், கால்நடை வளர்ப்பு, மீன்பிடி என அனைத்து தொழில்களையும் புரிந்து வந்த கிராமத்தினது தற்போதைய பொருளாதார நிலை மிக மோசமாக பின்தங்கியிருக்கின்றது. அயற்கிராம சிங்களவர்களால் பெரும்பாலான விவசாயக் காணிகள் அபகரிக்கப்பட்டிருக்கின்ற சூழலில் அவற்றைத் திரும்பப் பெறுவதற்கான அரசியற் பலமற்ற சமூகமாக இக்கிராம மக்கள் இருக்கின்றனர். கடலாலும் களப்பாலும் சூழப்பட்டிருக்கும் கிராமத்தின் கடற் பகுதியில் தென்பகுதி மீனவர்கள் அடாத்தாக தங்கியிருந்து மீன்பிடித் தொழிலில் ஈடுபடுகின்றனர். களப்பின் பெரும்பகுதியை புல்மோட்டை முஸ்லிம் மீனவர்கள் பயன்படுத்துகின்றனர். 25 வருடங்களாக தமிழர் தரப்பின் பிரசன்னமற்றிருந்த களப்பின் பகுதிகளை புல்மோட்டை மீனவர்கள் தமக்கேயான பகுதியாக உரிமை கோரி நிற்கின்றனர்.

இதனை இப்பகுதி மக்களுடன் பேசித் தீர்த்துக் கொள்வதற்கு எந்த தமிழர் அரசியல் தரப்பும் முன்வரவில்லை. வளங்கொழிக்கும் கடல் வள சுரண்டலுக் கெதிராக குரலெழுப்ப முடியாத கையறு நிலை கிராமத்தின் மிகப் பெரிய சாபக் கேடாகும். ஆட்கள் எண்ணிக்கையில் குறைவாகவும் தனித்தும் விடப்பட்டிருக்கும் தென்னமரபாடி திட்டமிடப்பட்டுச் சிதைக்கப்படுவதை மௌன சாட்சிகளாகப் பார்த்துக் கொண்டு நாம் கடந்து போகிறோம். கிராமம் தன்னெழுச்சியாக மீளக்குடியேறிய பின்பு அதன் இருப்பை நிலைநிறுத்துவதற்கான நிரந்தர வேலைத்திட்டங்களை தமிழர் தரப்பு முன்னெடுக்கத் தவறி விட்டது.

வடகிழக்கை இணைத்து நிற்கும் ஒரு தமிழ்க் கிராமம் தாயக அரசியலில் ஆற்ற இருக்கிற பங்கை முறையாக விளங்கிக் கொள்ளாமையும் தாயகக் கோட்பாட்டில் நில இருப்பை பேணுவதை குறிப்பான வேலைத்திட்டங்களாக மாற்றியமைக்காமையுமே இக்கிராமத்தின் இன்றைய நிலைக்கான முக்கிய காரணங்களாகும். கிராமங்களிலிருந்து மக்கள் நகரப்பகுதியை நோக்கி இடம் பெயருவதற்கான ஒட்டுமொத்த பொறுப்புக்களையும் தமிழர் வாக்குகளினால் பாராளுமன்றமும் மாகாண சபையையும் சென்றடைந்த கட்சிகளையே சாரும். யுத்தப்பாதிப்புகளிலிருந்த மக்களை மீளக்குடியேறிய மக்களை அவர்களது வாழ்க்கையைக் கொண்டு நடாத்துவதற்கேதுவான புறச்சூழலை போராடிப் பெற்றுக் கொடுத்திருக்க வேண்டியவர்கள் இன்னும் மௌனிகளாகவே இருக்கின்றனர். பொருளாதார அமைப்பு முறைமையை நிறுவுவதில் அத்தியாவசிய சேவைகளை மக்களுக்கு கொண்டு போய்ச்



சேர்ப்பதில் ஏன் இவ்வாறான அசமந்தப் போக்கை இவ்வரசியல் தலைமைகள் வெளிக்காட்டுகிறார்கள் என்பதை அறிய முடியவில்லை. அரசியலைத் தாண்டிய சிவில் அமைப்புக்களும் பொருத்தமான முறைமைகளைப் பரிசோதிப்பதில் முயற்சியின்றியே இருக்கின்றனர். சிங்களவர்களால் ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களை மீளப் போராடிப் பெறுவதற்கான மனவுறுதி மக்களிடம் காணப்பட்டாலும் ஆட்பலமின்மையினால் அதனை நடைமுறைப்படுத்துவதில் பய உணர்வை வெளிக்காட்டிநிற்கின்றனர்.

ஆயினும் மிகப் பெரும் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் இம்முறையும் பல ஏக்கர் நிலங்களை உழவு செய்து பயிரிட்டிருக்கின்றனர் தென்னமரபாடி விவசாயிகள். கடலிலும் களப்பிலும் மீன்பிடியை மீள ஆரம்பிக்கும் ஆர்வத்தை வெளிக்காட்டிநிற்கும் இப்பகுதி மக்கள் இவ்வளங்களை மீள தமக்கென உறுதி செய்து கொள்வதனூடாக ஏற்படப்போகும் தொழில் வாய்ப்புக்களினூடாக ஏனைய கிராம மக்களையும் மீளக் குடியேற்றிவிட முடியும் என நம்பிக்கை தெரிவிக்கின்றனர். மக்கள் இன்றி ஏராளமான மேட்டு நிலப்பகுதிகள் விவசாயம் செய்யப்படாமல் தரிசாகிக் கிடக்கின்றன. மேட்டுப் பயிர்ச்செய்கையை ஊக்குவிப்பதற்கான வேலைத்திட்டங்களை நெற் செய்கையை ஊக்குவிப்பதற்கான வேலைத்திட்டத்துடன் இணைத்து மேற்கொள்ள வேண்டும். கறவைப்பசுக்களை வைத்திருக்கும் விவசாயிகளுக்கு பாலுக்கான விலை புல்மோட்டையில் கிடைப்பதையும் விட 10 ரூபாய்கள் குறைவாகவே கிடைக்கின்றது.

பாலினைச் சந்தைப்படுத்தவதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதனூடாக நியாயமான இலாபத்தினை கிராமம் அனுபவிக்கவும் அதனூடு தொழிலை மேம்படுத்தவும் வாய்ப்புக்கள் அதிகரிக்கும். அண்ணளவாக ஐயாயிரம் பனை மரங்கள் இக்கிராமம் முழுவதும் சோலைகளாக காட்சி தருகின்றன. ஆனால் பனைகளிலிருந்து எதுவிதமான பிரயோசனங்களையும் மக்கள் பெற்றுக் கொள்வதில்லை. தேசிய சந்தையில் பனம் பொருட்களுக்கு ஏற்பட்டிருக்கும் கேள்வியை நிரப்புவதற்கான உற்பத்தியை இங்கிருந்தே தொடங்க முடியும். ஏனைய எல்லாத் தமிழ்க் கிராமங்கள் போலவே தென்னமரபாடியும் தனித்துவமான வளங்களை ஏனையவர்களுக்கு சுரண்டக் கொடுத்து கையறு நிலையில் நிற்கின்றது. முறையான பொருளாதார ஆய்வுகளை மேற்கொண்டு சந்தை வாய்ப்புகளை இனங்கண்டு பொருட்களுக்கான கேள்விகளை

திருநாவுக்கரசு கோபகன்

நிரப்புவதற்கான வேலைத்திட்டங்களை மேற்கொள்ள கிராமங்களால் சுயமாக முடியாது இருக்கின்றது. அரசியல் தலைமைகளினால் அணிதிரட்டப்படாத மக்களை சிவில் சமூக அமைப்புக்கள் திரட்டியாக வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். சுயசார்பு பொருளாதார நிலையை நோக்கி தமிழ்க் கிராமங்களை அழைத்துச் செல்ல வேண்டியது அவசியமாகும். அதனூடாகவே மக்களின் இருப்பை கிராமங்களில் நிலை நிறுத்துதல் முடியும். கிராமங்களின் உறுதியான இருப்பே தமிழ்த்தேசியத்தின் அடுத்த நகர்வை தீர்மானிக்கும் என்பதனை மறந்து விடாது பயணித்தாக வேண்டும்.

(அடுத்த வாரம்: தென்னன் மரபு அடி – ஆக்கிரமிக்கப்படும் தமிழரின் பண்பாட்டு மரபு- கந்தசாமி மலை மீதான ஆக்கிரமிப்பு)

தொடர்ச்சி...

# கிழக்கு அபிவிருத்தி அமைச்சு - யதார்த்தம் என்ன?

உறுப்பினர் சிறிநேசன் அவர்கள் செயல்படுத்துவார் எனவும் பூசி மெழுகிய பதில் சொல்லப்பட்டதாக அறிய முடிகிறது. இது ஒருவிடயம்.

அதேவேளை, வடக்கு அபிவிருத்தி என்ற அமைச்சை வைத்து தமிழ் மக்கள் திருப்தியளிக்கும் வகையிலான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவும் வேண்டும். ஏனெனில் நல்லாட்சியில் கடந்த மூன்றரை வருடங்கள் செயற்படுத்த முடியாத அபிவிருத்தி செயற்பாடுகள் எஞ்சியுள்ள ஒன்றரை வருட காலத்தில் நடைபெறும் என்பது சாத்தியக் குறைவானது.

அவ்வாறான நிலையில் கிழக்கையும் சேர்த்த அபிவிருத்தி என்ற பேச்சு வெறும் பேச்சாகவே இருக்கும்.

எப்படியோ கூட்டமைப்பின் நடவடிக்கைகள் கடந்த காலங்களை விட தற்போது கிழக்கில் பரவலான விமர்சனத்துக்கு உள்ளாகின்றன. தமிழ் தேசிய கூட்டமைப்பு கிழக்கு மக்களை ஓரம்கட்டுவதாக அல்லது கணக்கிலெடுக்காமல் செயற்படுவதாக கிழக்கு மக்கள் வெளிப்படையாக பேச ஆரம்பித்து விட்டனர். வடக்கை மையப்படுத்தியதான தமிழ் தேசிய கூட்டமைப்பின் செயற்பாடுகள் அல்லது கிழக்கை மறந்ததான அந்தக் கட்சியின் செயற்பாடுகள் எதிர்காலத்தில் கிழக்கு மக்கள் தமக்கான தனித்தவ அரசியலை நோக்கிச் செல்லும் செயற்பாட்டுக்கே வலுச்சேர்க்கும் என்பதே யதார்த்தம்.

விளம்பரம்



# ஆளில்லா விமானங்களை மடக்கும் கழுகுகள்



சமீபகால தொழில்நுட்ப வளர்ச்சியின் வடிவமாக பார்க்கப்படும் ட்ரோன்களை எதிர்கொள்வதற்கு புதுமையான வழியொன்றை கண்டறிந்துள்ளது நெதர்லாந்து.

சந்தேகத்திற்கிடமாக பறக்கும் ட்ரோன்களை நோக்கி பறந்து சென்று அவற்றை தனது நகங்களால் திசைதிருப்பி, செயலிழக்கச் செய்யும் வகையில் அந்நாட்டு காவல்துறையினர் கழுகுளுக்கு பயிற்சி அளித்துள்ளனர்.

இவ்வாறு பயிற்றுவிக்கப்பட்ட கழுகுகள் ட்ரோன்களை இரையாக கருதுவதாகவும், ஆனால் வேறெந்த பொருட்களையும் இவை தாக்குவதில்லை என்றும் தெரிவிக்கின்றனர்.

அனுமதியின்றி, தவறான நோக்கத்தில் இயக்கப்படும் ட்ரோன்களின் செயல்பாட்டை கேமராக்கள், ரேடார், ரேடியோ அலைகள் போன்றவற்றை கொண்டு அதன் இருப்பை கண்டுபிடிக்கவோ, இடத்தை கண்டறியவோ பயன்படுத்த முடியும்.

மேற்காணும் தொழில்நுட்பங்களை தற்போதுள்ள விமான நிலைய பாதுகாப்பு அமைப்பு முறையில் இணைத்து, பல கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கும் ட்ரோன்களைகூட கண்டறிய முடியும்.

அதுமட்டுமின்றி, இந்த அமைப்புமுறையை கொண்டு அந்த குறிப்பிட்ட ட்ரோனுக்கும், இயக்குபவருக்குமிடையேயான தகவல் தொடர்பை துண்டிக்க செய்து, மீண்டும் அது எங்கிருந்தோ கிளம்பியதோ அங்கேயே திரும்ப அனுப்ப முடியும்.

ஒரு குறிப்பிட்ட இடத்தை நோக்கி வரும் ட்ரோனை சுமார் அரை மைல் தூரத்திற்கு முன்பாகவே செயலிழக்க செய்யும் இதுபோன்றதொரு தொழில்நுட்பத்தை சீனா ஏற்கனவே உருவாக்கியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

மிகவும் வெளிப்படையான ஒரு வழி என்னவென்றால், அச்சுறுத்தலை உண்டாக்கும் ட்ரோனை சுட்டு வீழ்த்துவதேயாகும்.

எனினும், இலக்கை தவறவிடும் தோட்டாக்கள் ஏற்படுத்தும் ஆபத்தின் காரணமாக இந்த முறையை தாங்கள் பயன்படுத்தவில்லை என்று பிரிட்டனின் காட்விக் விமான நிலைய அதிகாரிகள்



தெரிவிக்கின்றனர்.

இருந்தபோதிலும், சந்தேகத்திற்கிடமாக காணப்படும் ட்ரோன்களை கை அல்லது தோள்பட்டை மீது வைத்து பயன்படுத்தும் துப்பாக்கிகளை கொண்டு சுடும்போது அதிலிருந்து வெளிவரும் வலைகள் மூலம் ட்ரோனை பிடிக்கும் மாற்று வழிமுறைகளை சில நிறுவனங்கள் உண்டாக்கியுள்ளன.

பிரிட்டனை சேர்ந்த பொறியியல்



நிறுவனமான ஒபன்ஒர்க்ஸ் உருவாக்கியுள்ள ஏவுகணைத் துப்பாக்கியான 'ஸ்கைவால்100', இலக்கை நோக்கி சுட்டவுடன் வலையை வெளியேற்றுகிறது.

இந்த வகை துப்பாக்கி, ஆசியா, ஐரோப்பா மட்டுமின்றி வட அமெரிக்க நாடுகளின் அரசாங்க மற்றும் பாதுகாப்பு அமைப்புகளால் பயன்படுத்தப்படுகிறது.

அனுமதிக்கப்படாத இடத்தை நோக்கி வரும் ட்ரோனை இடைமறித்து, வலையை செலுத்தி அதன் இயக்கத்தை நிறுத்தும் ட்ரோன்களும் பயன்பாட்டில் உள்ளன.



# மட்டு மாநகரசபை

## ஆசிய மன்றத்தின் அனுசரணையில் மாநகரத்தில் பிளாஸ்டிக் பொருட் பாவனைக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள்



மட்டக்களப்பு மாநகர எல்லைக்குள் பிளாஸ்டிக் பொருள் களின் பாவனையை கட்டுப்படுத்தல் மற்றும் பிளாஸ்டிக் கழிவுகளை முறையாக அகற்றல் போன்ற மாநகர சபையின் முயற்சிகளுக்கு ஆசிய மன்றம் பெரும் அனுசரணைகளைச் செய்து வருகின்றது.

இந்த நடவடிக்கைகளில் மாநக மக்களை கைகோக்கச் செய்வதற்கான வழிவகைகள் குறித்தும் ஆராயப்பட்டு வருகின்றன.

மட்டக்களப்பு மாநகரசபையினால் பிளாஸ்டிக் போத்தல்கள் மீள்சுழற்சிக்கு உட்படுத்துவதற்கான கலந்துரையாடல் கௌரவ மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன் அவர்களின் தலைமையில் அண்மையில் நடந்தப்பட்டது.

இதற்கான அனுசரணையை ஆசிய மன்றம் மற்றும் ஏனைய சில தனியார் நிறுவனங்கள் வழங்கியிருந்தன.

அதிகரித்துவரும் பிளாஸ்டிக் கழிவுகளை கட்டுப்படுத்தவும் பொது மக்கள் இதனை சேகரித்து மாநகரசபைக்கு மொத்தமாக வழங்குவதன் மூலம் வருமானமீட்டவும் முடியுமென மாநகர முதல்வர் அந்தக் கலந்துரையாடலில் தெரிவித்தார்.



## இதுவும் ஒரு நல்ல ஐடியா

எமது மட்டு நகர் காந்திப்பூங்கா அனைவரும் விரும்பி செல்லும் இடம் என்பது அறிந்ததே.

அதில் எமது மண்ணின் பழமை வாய்ந்த வரலாறு சொல்லும் டச்சுக் கால பாரம் துக்கி ஒன்று உள்ளது.

அது இயங்காத நிலையில் துருப்பிடித்துக் கிடக்கன்றது. எனது ஐடியா என்னவென்றால் அதைப்போல ஒரு மாதிரியை உருவாக்கி, இயங்கக்கூடிய வகையில் அமைத்தால் அது எவ்வாறு இயங்கியது என்று எமது சிறுவர்களுக்கு மாத்திரம் அல்ல பெரியவர்களுக்கும் காட்சிப்படுத்தலாம்



லியோண்

## வடக்கு மக்களுக்கான நிவாரணப் பொருள்கள்




கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் அண்மையில் ஏற்பட்ட அசாதாரண காலநிலையை அடுத்து வட மாகாணத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கான நிவாரணப் பொருள்களை சேகரிக்கும் நடவடிக்கைகளில் மட்டக்களப்பு மாநகர சபையானது ஈடுபட்டது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள வெள்ள அனர்த்தம் காரணமாக தமது உணவு, உடை, உறையுள் என்பவற்றை இழந்து நிர்க்கதியான நிலையில், அகதி முகாம்களில் தஞ்சம் புகுந்துள்ள தமிழ் உறவுகளுக்கு மனித நேய அடிப்படையில் உதவும் முகமாக மேற்படி நிவாரணப் பொருட்சேகரிப்பு ஆரம்பிக்கப்பட்டது.

சேகரிக்கப்படும் பொருள்கள் யாவும் எதிர்வரும் வெள்ளியன்று மாநகர சபையின் வாகனங்கள் மூலமாக நேரடியாக கொண்டு சென்று வழங்குவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

## மட்டக்களப்பு மாநகரசபையின் ஒளிவிழா



மட்டக்களப்பு மாநகரசபையின் நலன்புரிச்சங்கத்தின் ஏற்பாட்டில் ஒளிவிழா நிகழ்வானது மாநகர ஆணையாளர் திரு.கா.சித்திரவேல் அவர்களின் தலைமையில் 20.12.2018 அன்று மாநகர நகர மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மாநகர முதல்வர் கௌரவ தியாகராஜா சரவணபவன் அவர்கள் கலந்து கொண்டார்.
இதன்போது மாநகர உத்தியோகத்தர்களின் நத்தார் இசைநிகழ்வு இடம்பெற்றதுடன் சிறுவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. அதனைத் தொடர்ந்து கௌரவ மாநகர முதல்வர், பிரதி முதல்வர், உறுப்பினர்கள் மற்றும் மாநகர அதிகாரிகளினால் நிகழ்வில் கலந்துகொண்ட அனைத்து சிறுவர்களுக்கும் பரிசில் பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டன.

அண்மையில் கௌரவ மாநகர முதல்வர் தி.சரவணபவன் அவர்களினால் பாடசாலை மாணவர்கள் விடுமுறையை கொண்டாடுமுகமாக மார்கழி 15 தொடக்கம் இரு வாரங்களுக்கு தனியார் கல்வி நிலையங்கள் விடுமுறை வழங்க வேண்டும் என்ற ஆணைக்கமைவாக, சிறுவர்கள் மேற்படி நிகழ்வில் ஆர்வத்துடனும் சந்தோசத்துடனும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

**ஏசியா பவுண்டேசன் நிறுவனத்தின் உபதேசிய ஆளுகை திட்டத்தின் நன்கொடையின் ஊடாக இந்தப் பக்கத்துக்கான அனுசரணை வழங்கப்படுகின்றது**

# அன்றும் இன்றும் - அங்கம் 03

## ஏழிசை மன்னர் தியாகராஜ பாகவதரின் ஹரிதாஸ் அன்று! சூப்பர் ஸ்டார் ரஜனியின் 2.0 இன்று !!

"ஏழு ரூபாய் சம்பாதித்தபோது கிடைத்த மகிழ்ச்சி ஏழு கோடி ரூபா வருமானத்தில் இல்லை" என்று தனது பவளவிழாவில் ( 75 வயது) சொன்னவர் இசைஞானி இளையராஜா. இவர் தமிழ்நாட்டில் தேனீ மாவட்டத்தில் பண்ணைப்புரம்



என்ற கிராமத்திலிருந்த இடதுசாரி சிந்தனையுள்ள இசைக்குடும்பத்தில் பிறந்தவர். இவரது அண்ணன் பாவலர் வரதராஜன் கவிஞர். ஜெயகாந்தனின் நண்பர்.

மேடைகளில் இசை நிகழ்ச்சிகளை நடத்திவந்த இளையராஜா, சினிமாவிலும் சேர்ந்து இசையமைக்க விரும்பியபோது, 1969 இல் சென்னைக்கு வந்தார். வந்ததும் அண்ணன் பாவலர் வரதராஜனின் நண்பர் ஜெயகாந்தனிடம், சென்னையில் புதுவாழ்க்கை தொடங்குவதற்கு ஆலோசனைகேட்டு, "உங்களை நம்பித்தான் வந்திருக்கின்றேன்" எனச்சொன்னதும், வெகுண்டெழுந்த ஜெயகாந்தன், " என்னை நம்பி ஏன் வந்தாய், சென்னை உனக்குச் சரிப்படாது. உடனே ஊருக்குத்திரும்பு" என்று விரட்டப்பார்த்தார்.

ஜெயகாந்தனும் சிறிய வயதில் கடலூரிலிருந்து ரயில் டிக்கட் எடுக்காமல் சென்னை வந்து கஷ்டப்பட்டவர்தான். அந்தக்கஷ்டம் தனது தோழரின் தம்பிக்கு நேர்ந்துவிடக்கூடாது என்ற அக்கறைதான் அன்று ஜெயகாந்தனிடமிருந்தது.

ஆனால், இராசையா என்ற இயற்பெயர் கொண்டிருந்த இளையராஜா, தன்னம்பிக்கையுடன் சென்னையில் வாழ்ந்து, அன்னக்கிளி என்ற திரைப்படத்திற்கு இசையமைத்தார். 1969 இல் சென்னைக்கு வந்த இளையராஜாவுக்கு 1976 ஆம் ஆண்டுதான் அன்னக்கிளி படம் மூலமாக திரையுலகில் அறிமுகம் கிடைத்தது. இடையில் அந்த ஏழு வருடங்களும் அவர் சொந்தம் பந்தம் இல்லாத சென்னைப்பட்டினத்தில் எவ்வாறு கஷ்டப்பட்டிருப்பார் என்பதை ஊகித்து அறியமுடியும்.

ஆயிரத்திற்கும் மேற்பட்ட திரைப்படங்களுக்கு இசையமைத்து, இசைஞானி என்ற பெயரையும் சம்பாதித்து, பல மொழிப்படங்களுக்கும் இசையமைத்து, இந்திய மத்திய அரசின் பத்மபூஷன் விருதும் பெற்று ரசிகர்களின் மனதில் நீங்காத இடத்தை தக்கவைத்துக்கொண்டார்.

அன்று ஜெயகாந்தன், "திரும்பி ஊருக்குப்போ" என்று சொன்னதைக்கேட்டு அவர் திரும்பியிருந்தால், நாம் இன்று இளையராஜாவை அறிந்திருக்கமாட்டோம்.

தனது 75 வயது பிறந்த நாள் கொண்டாட்டத்தில், அவர் மனம்திறந்து உதிர்த்த வார்த்தைதான், "ஏழு ரூபாய் சம்பாதித்தபோது கிடைத்த மகிழ்ச்சி ஏழு கோடி ரூபா வருமானத்தில் இல்லை "

அன்று தனது 26 வயதில் தான் சம்பாதித்த ஏழு ரூபாவில் கிடைத்த மகிழ்ச்சி, இன்று இவ்வளவு புகழடைந்தும் விருதுகளும் பெற்று கோடிக்கணக்கான ரசிகர்களின் அபிமான இசைச்சக்கரவர்த்தியானதன் பின்னரும் - இன்று தமது 75 வயதில் ஏழு கோடி சம்பாதித்தாலும் மகிழ்ச்சி இல்லை என்று மனம் திறக்கிறார்.

"எப்பொழுது கேட்டாலும் புத்தம்புது பூவைப் போல இருப்பதே பாடல். அதுவே பாடலுக்கான தகுதியாகும்" என்றும் சேலத்தில் நடந்த தனது 75 ஆவது பிறந்த நாள் விழாவில் இசையமைப்பாளர் இளையராஜா சொன்னார்.

இந்தப் பின்னணிகளிலிருந்து , அன்றும் - இன்றும் மூன்றாவது அங்கத்திற்குச் செல்வோம்.


தமிழ்த்திரைப்படங்களுக்கு 20 ஆம் நூற்றாண்டில் பாடல் எழுதியவர்களும் கவிஞர்கள்தான். இந்த 21 ஆம் நூற்றாண்டில் அண்மையில் வெளிவந்த 2.0 திரைப்படத்தில் பாடல் எழுதியிருக்கும் மதன் கார்க்கி யும் கவிஞர்தான். இவர் கவிப்பேரரசு வைரமுத்துவின் புதல்வர்.

1944 ஆம் ஆண்டு வெளிவந்த தியாகராஜ பாகவதர் நடித்த ஹரிதாஸ் படத்தில் இடம்பெற்ற பாடல்களை எழுதிய பாபநாசம் சிவன் அவர்களும் கவிஞர்தான். இவருக்கு முந்திய மகாகவி பாரதியாருக்கு கடந்த டிசம்பர் மாதம்11 ஆம் திகதி 136 வயது நிறைவடைந்தது. பாரதியின் காலத்தில் தமிழ்த் திரைப்படங்கள் இல்லை. ஆனால், அவரது கவிதைகள் பல திரையிசைப் பாடல்களாகிவிட்டன. அவர் ஒரு சந்தக்கவிஞர். அவரது கவிதை வரிகளில் ஓசை நயமும் எளிமையான சொற்களும் பொதிந்திருக்கும். சாதாரண மக்களும் புரிந்துகொள்ளத்தக்க கருத்துக்கள் செறிந்திருக்கும். அதனால் ரசிகர்கள் அவரது கவிதைகள் திரைப்பட பாடல்களாக மாறியவேளையில், அவற்றில் லயித்து நெருங்கிவிட்டார்கள்.

இசையமைப்பாளர்கள் பலர் அவரது ஒரே பாடலுக்கு வெவ்வேறு இசைக்கோர்வைகளை அறிமுகப்படுத்தினர்.

கப்பலோட்டிய தமிழன் திரைப்படத்தில் ஒலித்த அனைத்துப்பாடல்களும் பாரதியாரின் கவிதைகள்தான். இதற்கு இசையமைத்தவர் ஜி. இராமநாதன்.

பாபநாசம் சிவன், கே. டி. சந்தானம், தஞ்சை ராமையா தாஸ், கே. பி. காமாட்சி, கொத்தமங்களம் சுப்பு, கு.மா. பாலசுப்பிரமணியம், கு.ச.கிருஷ்ணமூர்த்தி , கண்ணதாசன், பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம், வாலி, மருதகாசி, கா. மு.ஷெரீப், சுரதா, வைரமுத்து, மேத்தா, புலமைப்பித்தன் முதல், சமகால திரைப்படப் பாடலாசிரியர்களான பா. விஜய், பழனி பாரதி, ந. முத்துக்குமார்( இவர்




அண்மையில் மறைந்துவிட்டார்), தாமரை, தமிழச்சி தங்கபாண்டியன், சிநேகன், மதன் கார்க்கி என்று தலைமுறைகள் தொடருகின்றன.

கே. பி. காமாட்சி: "சிற்பி செதுகாத பொற்சிலையே" கு.மா. பாலசுப்பிரமணியம்: "அமுதைப் பொழியும் நிலவே அருகில் வராததேனோ",- "சித்திரம் பேசுதடி சிந்தை மயங்குதடி"

கு.ச.கிருஷ்ணமூர்த்தி : குற்றம் புரிந்தவன் வாழ்க்கையில் நிம்மதி கொள்வதென்பதேது ( இந்தப்பாடல் நடிகவேள் எம். ஆர். ராதாவின் வெற்றிப்படம் இரத்தக்கண்ணீரில் வருகிறது.)

கண்ணதாசன்: கலங்காதிரு மனமே தொடங்கி, கண்ணே கலை மானே வரையில் நான்காயிரத்திற்கும் மேற்பட்ட பாடல்கள் எழுதியவர்.

1944 - 1981 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் கொடிகட்டிப்பறந்த கண்ணதாசனின் சொல்லாட்சிக்கு சான்றாக அமையும் திரைப்படப் பாடல்கள் ஏராளம். சங்ககால தமிழ் இலக்கியத்தின் கற்பனைச் செறிவும் சொல்லாட்சியும் பாமரனைச் சென்றடையும் வகையில் திரைப்படப் பாடல்களில் புகுத்தியவர் கண்ணதாசன்.

இவருடைய அச்சம் என்பது மடமையடா எனத் தொடங்கும் மன்னாதி மன்னன் பாடலும் கவிதைதான். கதாநாயகன் எம்.ஜீ.ஆர். குதிரையில் வரும்போது டி. எம். சவுந்தரராஜன் (மன்னாதிமன்னன்) பாடும் பாடல். கவிஞர் மருதகாசி எழுதிய "சத்தியமே லட்சியமாய் கொள்ளடா" என்ற பாடல். நீலமலைத்திருடன் படத்தில் நடிகர் ரஞ்சன் குதிரையில் வரும்போது டி.எம். சவுந்திரராஜன் பாடுவார். பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்: "கவிதைகளும் பாடல்களும் இலக்கியமாக இருந்தால் மட்டும்போதும். அவை மக்களுக்கு நல்வழிப்படுத்தும் வழிகாட்டியாக அமையவேண்டும்" என்ற கருத்தின் வழிவந்தவர். சமுதாய உணர்வு, பகுத்தறிவு, பொதுவுடைமை, சீர்திருத்தம் போன்ற உயரிய நெறிகளை தனது கவிதைகளிலும் திரைப்படப்பாடல்களிலும் புகுத்தியவர்.

"தான் அமர்ந்திருக்கும் ஆசனத்தின் ஒரு கால் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்தான். "என்று மக்கள் திலகம் எம். ஜி. ஆர். சொன்னார். பகுத்தறிவுக்கொள்கையை பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் தனது பாடல்களில் பரப்பினார். அது எம். ஜி.ஆரின் வளர்ச்சிக்கு மிகவும் உதவியது. நாடோடி மன்னன் பாடல் ஒன்று அதற்கு மிகச்சிறந்த உதாரணம். அதில் வரும் "தூங்காதே தம்பி தூங்காதே" பல நல்ல கருத்துக்களை மக்களிடமும் ஆட்சியாளர்களிடமும் விதைத்து. கவிஞர் வாலி: 1958 ஆம் ஆண்டு “அழகர் மலைக் கள்ளன்” என்ற திரைப்படத்தில் தன்னுடைய முதல் பாடலை எழுதினார். இத்திரைப்படத்தில் வாலியின் முதல் பாடலை ‘பி. சுசிலா’ பாடியிருப்பார். பின்னர், தொடர்ந்து ஆயிரக்கணக்கான பாடல்களை எழுதினார். இவர்தான், "மாதவிப் பொன்மயிலால் தோகை விரித்தால் " (இருமலர்கள்) என்ற இலக்கிய நயம் மிக்க பாடலையும் எழுதினார். இவர்தான் "முக்காலா முக்காபலா" (காதலன்) என்ற குத்துப்பாடலும் இயற்றினார். "தனக்கே அதன் அர்த்தம் தெரியாது, பொருள் இல்லாதபோது பொருளுள்ள பாடல்கள் பல எழுதினேன். பொருள் வந்தபோது, பொருளற்ற பாடல்கள் புனைந்தேன்" என்றவர்தான் வாலி.

ஹரிதாஸ் 1944 ஆம் ஆண்டு வெளிவந்த திரைப்படமாகும். இளங்கோவன் உரையாடல் எழுத, சுந்தர ராவ் நட்கர்ணி இயக்கத்தில் வெளிவந்த இத்திரைப்படத்தில் எம். கே. தியாகராஜ பாகவதர், என். எஸ். கிருஷ்ணன் மற்றும் பலரும் நடித்திருந்தனர். இப்படம் 10 இலட்சம் ரூபாய் வசூலித்து அன்று சாதனை படைத்தது!

### ரஸஞானி

1944ம் ஆண்டு தீபாவளி அன்று (16 அக்டோபர்) சென்னை சன் தியேட்டர்சில் திரையிடப்பட்ட இப்படம் அதே திரையரங்கில் 100 வாரங்கள் தொடர்ந்து ஓடி சாதனை படைத்தது. 1946 தீபாவளி நாள் (22 நவம்பர்) வரை தொடர்ந்து ஓடியது. பிற திரையரங்குகளையும் சேர்த்து மொத்தம் 133 வாரங்கள் ஓடியது.

இந்தப்படத்தில் 20 பாடல்கள் இடம்பெற்றன. அவற்றுள் இன்றுவரையில் மன்மத லீலையை வென்றாருண்டோ - அன்னையும் தந்தையும் தானே பாரில் - கிருஷ்ணா முகுந்தா முராரே முதலான பாடல்களை மூத்த தலைமுறையினர் இன்றும் கேட்டு ரசிக்கின்றனர். இந்தப்பாடல்களை எழுதியவர்: பாபநாசம் சிவன். ஜெமனி வாசன் தயாரித்த படம்தான் வஞ்சிக்கோட்டை வாலிபன். அதில் இரண்டு பெரிய நட்சத்திரங்களான நாட்டியப்பேரொளி பத்மினியும் வைஜயந்தி மாலாவும் ஆடும் நடனம் முக்கியமானது. கண்ணும் கண்ணும் கலந்து எனத்தொடங்கும் அந்த பாடல்வரிகளை கொத்தமங்கலம் சுப்பு எழுதியிருந்தார். இவரது கதைதான் தில்லானா மோகனாம்பாள். கண்ணும் கண்ணும் கலந்து பாடலை இதுவரையில் இரண்டு கோடி ரசிகர்கள் கேட்டு ரசித்துள்ளதாக அறியப்படுகிறது.

1967 இல் ஏ.பி. நாகராஜனின் தயாரிப்பு கதை, வசனம் இயக்கத்தில் வந்த வெற்றிப்படம் திருவருட்செல்வர். இதில் தொடக்கத்தில்

தொடர்ச்சி... (பக்கம் -15 )

# விளையாட்டு

## கால்பந்தில் மகத்தான சாதனைகள் புரிந்த சவரிமுத்து மகேசன்





மட்டுநகரின் கால்பந்தாட்ட வரலாற்றில் 1970களிலிருந்து பிரகாசித்த வீரர்களுள் ஒருவராக டொல்கி மகேசன் என அழைக்கப்படும் திரு.சவரிமுத்து அன்ரனிராசா அவர்கள் விளங்கியுள்ளார். மட்டுநகரின் கால்பந்தாட்டம் பற்றிய உரையாடலின் போது 1970களிலிருந்து கால்பந்தாட்டத்துடன் பயணிக்கும் பெரும்பாலான நபர்கள் ஞாபகப்படுத்தும் குறிப்பிட்ட சில வீரர்களுள் ஒருவராக திரு மகேசன் அவர்கள் விளங்கி வருகிறார்.

திரு.மகேசன் அவர்கள் 1953.07.10 ஆந் திகதி மட்டக்களப்பு பன்சல வீதியில் பிறந்து தனது இளமைக் காலத்தில் அங்கேயே வாழ்ந்துள்ளார். மட் புனித மிக்கேல் கல்லூரியில் கல்வி கற்ற இவர், பாடசாலை நாட்களில் கால்பந்தாட்டத்தில் பங்குபற்றியதுடன் பாடசாலை கால்பந்தாட்ட அணியின் முக்கிய வீரராகவும் திகழ்ந்துள்ளார். பாடசாலை நாட்களின் பின்னர் 1972 இல் மட்டுநகர் பாடுமீன் பொழுது போக்குக் கழகத்தில் இணைந்து கால்பந்தாட்ட வீரராக களமாடிய இவர் கால்பந்தாட்டம் எனும் வித்தையூடாக மட்டுநகருக்கு பெருமை சேர்த்துள்ளார். 1978, 1982 ஆகிய இரு வருடங்களிலும் தேசிய விளையாட்டுப் போட்டியில் மட்டக்களப்பு கால்பந்தாட்டத் தெரிவு அணி இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்று இரண்டாமிடங்களைப் பெற்றுக் கொண்டது. இந்த தெரிவு அணியில் திரு மகேசன் அவர்கள் மிக முக்கிய வீரராகக் களமாடியுள்ளார். இவ்வாறு தேசிய ரீதியில் மட்டக்களப்பிற்கு கால்பந்தாட்டத்தினூடாகப் பெருமை சேர்த்துத் கொடுத்தமை காரணமாக அக்காலத்தில் நீர்ப்பாசனத் திணைக்களத்தில் அரச தொழில்வாய்ப்பினையும் பெற்றுக் கொண்டார்.

தமக்குக் கால்பந்தாட்டத்தை கற்றுக் கொடுத்த திரு.ரெட்ணசபாபதி மாஸ்டர், திரு. வின்சன்ற் ஜோசப் ஆகியவர்களை என்றும் மறக்க முடியாது எனவும், தன்னைக் கவர்ந்த வீரராக கால்பந்தாட்டம் ஆடிய திரு ரெட்ணசிங்கம் அவர்கள் விளங்கினார் எனவும் கூறும் இவர், தன்னுடன் கால்பந்தாட்டம் ஆடிய பிரபல வீரர்களான சல்மான், ஜெயசூரியம், ஜெயராஜா, ஹென்றிக், சௌந்தரராஜன் முதலியோரையும் ஞாபகப்படுத்தத் தவறவில்லை.

ஒரு முக்கியமான கால்பந்தாட்ட வீரனாக முத்திரை பதித்த மகேசன் அவர்கள் மட்டக்களப்பின் கால்பந்தாட்ட வரலாற்றில் ஒரு சிறந்த கால்பந்தாட்டப் பயிற்றுனராகத் தனது தடத்தினை அழுத்தமாக அடையாளப்படுத்தியுள்ளார்.

விசேடமாக மட்டக்களப்பின் கால்பந்தாட்டத்தில் தற்போது காத்தான்குடி கால்பந்தாட்டச் சங்கம் தனியாகச் செயலாற்றும் அளவிற்கு அப்பிரதேசத்தில் கால்பந்தாட்டம் விருத்தி பெற்றுள்ளது. இந்த விருத்திக்கு காரணமாக இருந்தவர்களுள் குறிப்பிடத்தக்க ஒருவராக திரு.மகேசன் அவர்கள் உள்ளமையினைப் பலரும் கூறுகின்றார்கள். 1983 இன் பின்னர் திரு. மகேசன் அவர்கள் ஆரையம்பதியில் வாழ்வதற்காகச் சென்றதைத் தொடர்ந்து காத்தான்குடி சன்றைஸ் விளையாட்டுக் கழகத்தின் பயிற்சியாளராகப் பல வருடங்கள் செயலாற்றியுள்ளார். இதன் காரணமாக காத்தான்குடி சன்றைஸ் கழகம் மட்டுநகரின் கால்பந்தாட்டத்தில் முன்னணிக் கழகங்களுள் ஒன்றாக திகழும் நிலை உருவானது.

தற்சமயம் ஆரையம்பதியில் உடல்வலுவூட்டல் நிலையம் ஒன்றினை ஒழுங்கமைத்து நடாத்தி வரும் இவர் மாகாண மட்டத்தில் உடல் வலுவூட்டல் போட்டிகளில் பலரும் வெற்றி பெற்று சிறந்த ஆணழகர்களாக வளரப் பங்களித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**து.கௌரீஸ்வரன்**

திரு மகேசன் அவர்கள் மட்டுநகரின் புகழ்பெற்ற ஜீவம் ஜோசப் அவர்களின் இசைக் குழுவில் ஒரு வாத்தியக் கலைஞராகவும் பங்குபற்றியுள்ளார். இதன்காரணமாகவே இவர் டொல்கி மகேசன் என அழைக்கப்பட்டார். இத்துடன் கோட்டைமுனைப் பகுதியில் சமூக நாடகங்களை அளிக்கை செய்த வெண்ணிலா கலாமன்றத்தில், திரு இரா.தவராஜா அவர்களுடன் இணைந்து மேடை நாடகங்கள் பலவற்றிலும் இவர் நடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு கால்பந்தாட்டம், கலை என ஆர்வத்துடன் செயலாற்றி மட்டுநகருக்கு புகழ்சேர்த்துள்ள திரு மகேசன் அவர்கள் மட்டுநகரின் கால்பந்தாட்டம் வளருவதற்கு கால்பந்தாட்ட வீரர்களின் சுய பயிற்சியும், பயிற்றுநரின் வழிகாட்டலும் மிக அவசியம் என அழுத்தி உரைக்கின்றார்.

1970,80 களில் தேசிய ரீதியில் கால்பந்தாட்டத்தில் மட்டக்களப்பைப் பார்த்து பிற மாவட்ட அணிகள் அச்சங் கொள்ளும் நிலை இருந்தது. ஆனால் இன்று அது இல்லை இதனை மீளக் கொண்டு வர தொடர் பயிற்சியும் நல்ல பயிற்றுநர்களின் செயலாற்றுகையும் அவசியம் தேவை என ஆதங்கப்படுகின்றார்.

பக்க அனுசரணை : கோட்டைமுனை விளையாட்டுக் கழகம்
Koddamunai Sports Club
Batticaloa

## 'கிழக்கு பாடசாலைகளின் இல்ல விளையாட்டுப் போட்டிகளை ஜனவரிக்குள் நடத்த வேண்டும்'

(காரைதீவு சகா)

கிழக்கு மாகாணத்திலுள்ள சகல பாடசாலைகளும் தங்கள் இல்ல விளையாட்டுப்போட்டிகளை எதிர்வரும் ஜனவரி 31ஆம் திகதிக்குள் நடாத்தி முடித்தல் வேண்டும் என்று கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் எம். கே.எம்.மன்சூர் சுற்றுநிருபமொன்றை அனுப்பிவைத்துள்ளார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இல்ல விளையாட்டுப்போட்டிகள் பயிற்சிகள் போன்றவற்றை பாடசாலை நேரத்தில் நடாத்துவதைத் தவிர்த்துக்கொள்ளவேண்டும்.

வலயமட்டப்போட்டிகள் யாவும் 31.03.2019க்கு முதல் நடாத்திமுடிக்கப்படல் வேண்டும். அதேபோல் மாகாணமட்டப்போட்டி 10.06.2019க்கு முதல் நடாத்தி முடிக்கப்படல் வேண்டும்.

## டெனிஸ் சமர்

மட்டக்களப்பு மாவட்டத்தின் டெனிஸ் பயிற்சி நிலையத்தின் பழைய மாணவர்களினால் 27ஆம் திகதி டெனிஸ் சமர் ஒன்று வெகு விமர்சயாக நடத்தப்பெற இருந்தது.

30 வயதிற்கு மேலானவர்களுக்கும் 30 வயதிற்கு கீழானவர்களுக்குமான இரு குழுக்களிடையே இந்த டெனிஸ் சமர் நடைபெறவிருக்கிறது. மட்டக்களப்பு மாவட்ட பழைய மாணவர்களினது சவால் கிண்ண சமரானது மட்டக்களப்பு டெனிஸ் பயிற்சிக் கழக மைதானத்தில் காலை 07.30 மணிக்கு நடைபெற இருந்தது.



இதில் 30 வயதிற்கு மேற்பட்ட டெனிஸ் குழுவின் தலைவராக திரு.பகீரதன் அவர்களும் 30 வயதிற்கு கீழான டெனிஸ் குழுவின் தலைவராக கழகத்தின் தலைமை பயிற்றுவிப்பாளர் திரு.தினேஷ்குமார் அவர்களும் தலைமை தாங்கவிருந்தனர்.

இதனையடுத்து 28ஆம் திகதி மாலை 05.30 மணிக்கு மட்டக்களப்பு டெனிஸ் கழகத்தினால் Y.M.C.A. மண்டபத்தில் டெனிஸ் வீரர்களுக்கும் பழைய டெனிஸ் மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்குமான ஒரு ஒன்றுகூடல் நிகழ்வொன்றும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

## மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்தினால் நடத்தப்பட்ட விளையாட்டு அபிவிருத்தி சம்பந்தமான களப்பயிற்சி



மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்தின் விளையாட்டுப் பிரிவின் ஏற்பாட்டில் 2019 ஆம் ஆண்டில் மாவட்ட மட்டத்தில் முன்னெடுக்க வேண்டிய விளையாட்டு அபிவிருத்தித் திட்டங்களை வகுத்துக் கொள்ளும் நோக்கிலான இரு நாள் வதிவிடக் களப்பயிற்சி செயலமர்வு கடந்த 23, 24 ஆந் திகதிகளில் சத்துருக்கொண்டான் சர்வோதயம் பயிற்சி நிலையத்தில் நடைபெற்றது.

மாவட்ட அரசாங்க அதிபர் திரு.மா.உதயகுமார் அவர்களின் ஆலோசனையுடனும், மேலதிக அரசாங்க அதிபர்களான திருமதி. சுதர்சினி சிறிகாந், திருமதி நவரூபரஞ்சினி முகுந்தன் ஆகியோர்களினதும் வழிகாட்டலில் மாவட்ட விளையாட்டு அதிகாரி திரு.வே.ஈஸ்பரன் அவர்களின் இணைப்பாக்கத்தில் இந்நிகழ்ச்சி கச்சிதமாக நடைபெற்றுள்ளது.

இக்களப்பயிற்சிக்கான நிதியுதவியினை கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களப் பணிப்பாளர் திரு என்.எம். நௌபீஸ் அவர்கள் ஒதுக்கீடு செய்திருந்தார்.

இக்களப்பயிற்சியில் கிழக்குப் பல்கலைக்கழக விளையாட்டுப் பணிப்பாளர், மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரி உடற்கல்வி விரிவுரையாளர், வலயக் கல்வி அலுவலகங்களின் உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், உடற்கல்வி ஆசிரியர்கள், தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உத்தியோகத்தர்கள், மத்திய, மாகாண அரசுகளில் பணிபுரியும் விளையாட்டு உத்தியோகத்தர்கள், விளையாட்டுப் பயிற்றுனர்கள் எனப் பலர் பங்குபற்றி மாவட்டத்தின் 2019 ஆம் வருடத்திற்கான விளையாட்டு நடவடிக்கைகளை ஆக்கபூர்வமாகத் திட்டமிட்டுக் கொண்டார்கள்.

மேற்படி களப்பயிற்சியின் வளவாளர்களாக காத்தான்குடி பிரதேச செயலாளர் திரு. உ.உதயசிறிதர் அவர்களும், மட்டக்களப்பு வலயக் கல்வி அலுவலகத்தின் தொழில் வழிகாட்டல் பிரிவைச் சேர்ந்த திரு.அ.ஜெகநாதன் அவர்களும் செயற்பட்டிருந்தனர்.

# கலித்தொகை இன்பம்



## காளையை முறியடித்தான், கன்னியைக் கரம்பிடித்தான்

முல்லை நிலத்தில் “ஏறுதழுவுதல்” என்பது ஒரு முக்கிய நிகழ்ச்சி. மணப்பெண்ணின் வீட்டில் அதற்காகவே வளர்க்கப்பட்ட காளையை அடக்க முயல்வதே ஏறுதழுவுதல் ஆகும். காளையை அடக்கி வெற்றி பெறுபவனுக்கே அந்தப்பெண்ணை மணம் முடித்துக்கொடுப்பது பண்டைக்காலத்தில் வழக்கமாயிருந்தது. “கொல்லேறு தழுவுதல்” என்று அதை ஒரு விழாவாகவே நடாத்தினார்கள்.

அத்தகையதொரு முல்லை நிலத்தில் அழகான ஓர் ஊர். அங்கே ஓரிடத்தில் கன்னிப் பெண்கள் கூடினார்கள். நறுமணம் வீசும் பிடவம், நிலத்திலே தவழுகின்ற கொடிமுல்லை, பலவண்ணங்கொண்ட தோன்றி, ஒளிருகின்ற கொன்றை முதலிய பல்வேறு மலர்களைக் கொய்து மாலைகட்டி மகிழ்வோடு விளையாடிக்கொண்டிருந்தார்கள். அவர்களைப் பார்ப்பதற்காகவே இளைஞர் கூட்டம் ஒன்று அங்கே வளைய வளைய வந்துகொண்டிருந்தது. அவர்களில் தலைவனும் ஒருவன். விளையாடிக் கொண்டிருந்த அந்த இளம் பெண்களில் ஒருத்தியின் அழகு அவனை மிகவும் கவர்ந்து விட்டது. அவளது நளினம் அவனது இதயத்தைச் சுண்டி இழுத்தது. உடனே தன் தோழனிடம், “அடேய் நண்பா! அங்கே மகிழ்ச்சியோடு விளையாடிக்கொண்டிருக்கும் கன்னிப் பெண்களைப் பார்த்தாயா? அவர்களிலே அதோ அவர்களுக்கு மத்தியிலே ஒய்யாரமாக நின்றுகொண்டிருக்கிறாளே ஒருத்தி. அவள் தனது உடலுக்குள் எனது உயிரைப் புகுந்துகொள்ளச் செய்வதுபோல என் உள்ளத்தைக் கவர்கிறாள். அவளைத் தெரியுமா உனக்கு?” என்று கேட்டான். அதற்கு தோழன், “ ஓ அவளா? மிகவும் கொடிய போர்க்காளையை அடக்கி வெற்றி கொள்பவர் அல்லாது வேறெவரும் அவளை மணம் முடிக்க முடியாது என்று ஏற்கனவே பறையறைந்து விட்டார்கள். அவள் அல்லவா இவள்?” என்று சொன்னான்.

உடனே தலைவன். “நான் அந்தக்காளையைத் தழுவி அடக்குவதற்கு முன்வந்திருக்கிறேன் என்று அவளின் பெற்றோரிடம் போய்ச் சொல்” என்று கூறினான். தலைவனின் தோழனும், உறவினர்களும் அவளின் பெற்றோரிடம் சென்று தலைவனின் விருப்பத்தைச் சொல்லி, “இப்போதே நாங்கள் தயார், தாமதிக்க மாட்டோம்” என்று கூறினார்கள்.

அவளின் பெற்றோரும், சுற்றத்தினரும், ஒன்றுகூடிப் பேசினார்கள். ஏறுதழுவும் விழாவை நிச்சயித்தார்கள். பின்னர், தங்கள் பெண்ணுக்கு மணமகனைத் தெரிவு செய்வதற்கான ஏறுதழுவுதல் விழா நடைபெறும் என்று ஊரெங்கும் பறையறைவித்தார்கள்.

அந்த விழாவிலே, நோக்குமிடமெல்லாம் கண்கள் பூக்கும் அளவிற்கு பெண்கள் அமர்ந்திருக்கக்கூடியவாறு பரண்களை அமைத்தார்கள். பரண்கள் நிறைய அழகிய பெண்கள் அமர்ந்திருந்தார்கள். ஊரவர்கள் எல்லோரும் கூடியிருந்தார்கள்.



அழகில் சிறந்த இனத்தைச் சேர்ந்த காளைகள் அங்கே திமிறிக் கொண்டு நின்றன. அந்தக் காளைகளின் மேல் பாய்ந்தேறுவதற்காக ஆயர் குலத்து இளைஞர்கள் அவற்றின் எதிரே ஆரவாரத்துடன் வேகமாகச் சென்றார்கள். அவர்கள் தங்களை நோக்கி வருவதைக்கண்ட காளைகள் கோபத்துடன் சிலிர்த்தன. அவர்களை நோக்கிப் பாய்ந்தன. எங்கும் புழுதி கிளம்பியது. இளைஞர்கள் நெஞ்சை நிமிர்த்தி நின்றார்கள். காளைகள் தங்கள் கொம்புகளைத் தரையைத் தொடுவதுபோலத் தாழ்த்திப் போருக்குத் தயாராயின. அதனைக் கண்ட இளைஞர்கள் சிலர் கலங்கினார்கள். காளைகள் மீது பாய்ந்தவர்கள் பலர் காயப்பட்டார்கள், ஐயோ என்று கதறினார்கள். அப்போது தலைவன் நீலமணியைப்போன்ற நிறத்தைக்கொண்ட நீண்ட தோளையுடைய காளையின் மேல் பாய்ந்தான். அதன் கழுத்தை இறுகப் பற்றினான். அதுதான் அவனின் மனதைக் கொள்ளை கொண்ட கன்னியின் பெற்றோர் வளர்த்த காளை. அது சினத்துடன் பாய்ந்தோடியது. கழுத்தைப் பற்றிய கைகளை மேலும் இறுக்கி, காளைக்கு நோவெடுக்கும்படி அங்கும் இங்கும் இழுத்து நீண்ட நேரம் அதனை அலைக்கழித்தான். காளையால் தாக்குப் பிடிக்க முடியவில்லை. அது களைத்துவிட்டது. மிகவும் வருத்தமுற்று அடங்கியது.

அந்தக் காளை பட்ட வேதனையைக் கண்டவர்கள் இருக்கைகளை விட்டு எழுந்து நின்றார்கள். காளையின் சொந்தக்காரர்கள் அந்த இளைஞன் அதனை அடக்கிக் கொண்டிருப்பதற்காக மகிழ்ச்சியடைவதை விடுத்து ஏனோ அவன்மேல் பகைமை பாராட்டினார்கள்.

“சரி, சரி இனித் தண்ணுமை வாத்தியம் ஒலிக்கட்டும்” என்று பெண்ணின் சுற்றத்தவர்கள் கூறினார்கள். காளையை அடக்கிய இளைஞனின் கருமையான உடலினையும், திண்மையான தோள்களையும், அவனின் திறமையையும், காளையோடு பொருதிய தன்மையையும், அவனோடு சேரப்போகின்ற அழகிய பெண்ணின் மென்மையான தோள்களையும் பாராட்டி குரவைக் கூத்தாடி மகிழலாம் வாருங்கள் என்று உறவினர்கள் அழைத்தார்கள். எல்லோரும் எழுந்து குரவைக் கூ த்தைக் காண்பதற்காகச் சென்றார்கள்.

(“இளைஞர்களே! இதற்கு முன்னரும் கொல்லேறுதழுவி எத்தனையோபேர் காளைகளின் கழுத்துக்களிலேயே தங்கித் துன்பப்பட்டமையைக் கண்டிருந்தும்கூட, இன்னமும் கொல்லேறு தழுவச்சொல்கின்றார்களே இந்த இடையர் குல மக்கள். இவர்கள் அறியாமை மிகுந்தவர்கள் தானே!” என்ற புலவரின் அறிவுரைக் கூற்றும் பாடலில் உள்ளமையைக் காணலாம்)

இந்தக் காட்சியை எழிலுறக்கூறுகின்ற பாடல் வருமாறு:

சட்டத்தரணி, பாடும்மீன்
சு.ஸ்ரீகந்தராசா

கண்ணகன் இருவிசும்பில் கதழ்பெயல் கலந்துஏற்ற
தண்நறும் பிடவமும், தவழ்கொடித் தளவமும்
வண்ணவண் தோன்றியும் வயங்கிணர்க் கொன்றையும்
அன்னவை பிறவும் பன்மலர் துதையத்
தழையும் கோதையும் இழையும் என்றிவை
தைஇனர் மகிழ்ந்த திளைஇ விளையாடும்
மடமொழி ஆயத்தவருள் இவள்யார் உடம்போடு
என்உயிர் புக்கவள், இன்று?
ஓ ஓ! இவள், பொருபுகல் நல்லேறு கொள்பவர் அல்லால்
திருமாமெய் தீண்டலர் என்று கருமமா
எல்லாரும் கேட்ப அறைந்து எப்பொழுதும்
சொல்லால் தரப்பட் டவள்
சொல்லுக! பாணியேம் என்றார், அறைக என்றார், பாரித்தார்
மாணிழை ஆறாகச் சாறு.
சாற்றுள் பெடையன்னார் கண்பூத்து, நோக்கு வாயெல்லாம்
மிடைபெறின் ஏராத் தகைத்து.
தகைவகை மிசைமிசைப் பாயியர் ஆர்த்து, உடன்
எதிர்எதிர் சென்றார் பலர்.
கோலைமலி சிலைசெறி செயிர்அயா சினம்சிறந்து
உருத்து எழுந்து ஓடின்று மேல்
எழுந்தது துகள் ஏற்றனர் மார்பு
கவிழ்ந்தன மருப்பு கலங்கினர் பலர்
அவருள். மலர்மலி புகல்எழ அலர்மலி
மணிபுரை நிமிர்ந்தோள் பிணைஇ
எருத்தோடு இமிலிடைத் தோன்றினன், தோன்றி
வருத்தினான் மன்ற, அவ் வேறு.
ஏறெவ்வம் காணா எழுந்தார் எவன்கொலோ
ஏறுநடை நல்லார் பகை?
மடவரே, நல்லாயர் மக்கள் நெருநை
அடலேற்று எருத்து இறுத்தார்க் கண்டும், மற்று இன்றும்
உடலேறு கோள்சாற்று வார்!
ஆங்கினித்,
தண்ணுமைப் பாணி தளராத எழூஉக
பண்ணமை இன்சீர்க் குரவையுள், தென்கண்ணித்
திண்தோள், திறல்ஒளி, மாயப்போர், மாமேனி
அந்துவர் ஆடைப் பொதுவனோடு, ஆய்ந்த
முறுவலாள் மென்தோள் பாராட்டிச். சிறுகுடி
மன்றம் பரந்தது உரை!

(கலித்தொகை, முல்லைக்கலி பாடல் இல: 2 பாடியவர்: நல்லுருத்திரனார்)

தொடர்ச்சி...

# படுவான்கரையை ஊடாக ஒரு நெடுஞ்சாலை வேண்டும்



கொண்டிருந்தது. யுத்தத்தின் கோரவடுக்களை இப்போதும் இவ்வீதியில் காணமுடியும். வால்க்கட்டுசந்தியிலிருந்து தெற்கே தாமரைப்பூச் சந்திவரையான 2.6 கிலோமீற்றர் வீதி 3 அடி உயரத்திற்கு உயர்த்தப்பட்டு முழுமையாக அபிவிருத்தி செய்யப்படவேண்டியது உடனடி அவசரத்தேவையாக உள்ளது. மேற்படி தாமரைப்பூச் சந்திக்கும் வால்கட்டுச் சந்திக்கும் இடையிலேதான் கடுக்காமுனைக்குளம் ஊடறுக்கிறது.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் உட்கட்டமைப்பு அபிவிருத்திகள் தொடர்பாக கடந்த 8 வருடங்களில் மில்லியன் கணக்கில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதாகப் பத்திரிகைகளில் செய்திகள் வெளிவந்தன. அப்படியானால் உள்நாட்டு யுத்தம் மையம் கொண்டிருந்த இந்த 4.8கிலோமீற்றர் நீளமான வீதி கச்சேரி திட்டமிடல் உத்தியோகத்தர்களாலும், பாராளுமன்ற உறுப்பினர்களாலும் கவனிக்கப்படாதது ஏன் என்பது தெரியவில்லை.

மட்டக்களப்பு மாவட்டத்தின் தெற்கில் எழுவான்கரையில் காத்தான்குடி, ஆரையம்பதி, களுவாஞ்சிக்குடி என மூன்று பிரதேசசெயலாளர் பிரிவுகளும் படுவான்கரையில் மூன்று பிரதேசசெயலாளர் பிரிவுகளும் இருக்கின்றன. மேலும் படுவான்கரை 90 வீதமான நிலப்பிரதேசத்தினைக் கொண்டுள்ளது. எனினும் தரம்மிக்க ஒரு வீதியின்மை காரணமாக இப்பிரதேசம் பெருமளவு அபிவிருத்திகு ன்றிக்காணப்படுகின்றது. இம்மூன்று பிரதேச செயலாளர் பிரிவுகளினதும் மக்கள் தொகை பின்வருமாறு. 2013ம் ஆண்டுபுள்ளிவிபரத்தின்படி

போரதீவுப்பற்று (வெல்லாவெளி) –43598

பட்டிப்பளை(மண்முனைதென்மேற்கு)–26469

வவுணதீவு (மண்முனைமேற்கு) - 30205

அண்ணளவாக ஒருலட்சம் மக்கள் தொகையினை உடைய இப்பிரதேசத்தினை அரசியல் வாதிகளும் அதிகாரிகளும் மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் பார்க்கின்றனர் என்பதற்கு மணற்பிட்டிசந்திக்கும் தாமரைப்பூச் சந்திக்கும் இடையிலான 4.8 கிலோமீற்றர் நீளமானவீதி தற்போதும் ஒரு சான்றாக திகழ்கின்றது.

அண்ணளவாக ஒருலட்சம் மக்கள் தொகையினை உடைய இப்பிரதேசத்தினை அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் பார்க்கின்றனர் என்பதற்கு மணற்பிட்டிசந்திக்கும் தாமரைப்பூச் சந்திக்கும் இடையிலான 4.8கிலோமீற்றர் நீளமான வீதி தற்போதும் ஒரு சான்றாகத்திகழ்கின்றது. சமூகச் செயற்பாட்டாளர்கள் இவ்விடயமாக விரைந்து செயற்பட வேண்டியுள்ளது.

# அறிவோம் – தெளிவோம் – பகிர்வோம் – 17

## தரம் 11 - தமிழ்மொழியும் இலக்கியமும்

- மட்டுநகர் யுவன் -

### பயிற்சி செய்வோம்

01. நெல்லின் இளையது நாற்று என்பது போல பனையின் இளையது
    (1) வடலி (2) கன்று (3) குட்டி (4) நாற்று

02. அறிஞர் கூட்டத்தைக் குறிக்கப் பயன்படும் பொருத்தமான சொல்
    (1) அணி (2) கூட்டம் (3) அவை (4) திரள்

03. அரசியல், விளையாட்டு முதலிய நாட்டுநடப்புக்களை எடுத்துக்காட்ட வித்தியாசமான முறையில் நையாண்டியுடன் காட்டூன் படங்களைப் பத்திரிகைகளில் வரைவர். இங்கு காட்டூன் (Cartoon) என்பதைக் குறிக்கத் தமிழில் வழங்கும் சொல்
    (1) கேலிச் சித்திரம் (3) நையாண்டிச் சித்திரம்
    (2) களிச் சித்திரம் (4) வரைபுக் கோட்டுச் சித்திரம்

04. கிடைப்பதற்கரிய பொருள்களை ஒவ்வொரு நாடும் மியூசியத்தில் வைத்துப் பாதுகாப்பது வழமையானதாகும். இங்கு மியூசியம் (Museum) என்பதைக் குறிக்கத் தமிழில் வழங்கும் சொல்
    (1) தேசிய சுவடிகள் கூடம் (3) பாதுகாப்பு அமைச்சு
    (2) பொது நூலகம் (4) அருங்காட்சியகம்

05. அலையலையாய் மக்கள் கூட்டம்
    (1) திரண்டனர் (2) திரண்டார் (3) திரண்டது (4) திரண்டன

06. நிருவாக சபைக் கூட்டத்தில் மன்றப் பொருளாளரினால்
    (1) கணக்கறிக்கை சமர்ப்பித்தார். (3) கணக்கறிக்கை சமர்ப்பிக்கப்பட்டன.
    (2) கணக்கறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. (4) கணக்கறிக்கையைச் சமர்ப்பித்தது

07. பின்வருவனவற்றுள் அகச்சுட்டு
    (1) அன்பு (2) எது (3) அது (4) அக்காலம்

08. பின்வருவனவற்றுள் அகவினா
    (1) வருவீரா (2) போவீரோ (3) ஏன் (4) செய்வானே

09. பின்வருவனவற்றுள் வேற்றுமை உருபு ஏற்காத சொல்
    (1) மகனை (2) மகனே (3) மகனால் (4) அப்பாவுக்கு

10. மனத்தில் நல்ல எண்ணங்களை உருவாக்குங்கள். இதில் 'இல்' உருபு உணர்த்துவது
    (1) ஏழாம் வேற்றுமை (3) ஐந்தாம் வேற்றுமை
    (2) ஆறாம் வேற்றுமை (4) நாலாம் வேற்றுமை

11. பின்வருவனவற்றுள் வேற்றுமை உருபு ஏற்ற சொல்
    (1) மக்காள் (2) தம்பீ (3) மகனே (4) அப்பாவால்

12. 'பார்த்துக்கொண்டான்' என்பதன் பகுதி
    (1) பார் (3) பார்த்துக்கொள்
    (2) பார்த்து (4) பார்த்துக்கொண்டு

13. பின்வருவனவற்றுள் தோன்றல் விகாரம் இடம்பெற்ற புணர்ச்சி
    (1) வடபுலம் (2) காற்சட்டை (3) புனித தலம் (4) தலைக்கவசம்

14. பின்வருவனவற்றுள் திரிதல் விகாரம் இடம்பெற்ற புணர்ச்சி
    (1) வடபுலம் (2) காற்சட்டை (3) புனித தலம் (4) தலைக்கவசம்

15. பின்வருவனவற்றுள் திரிதல் விகாரம் **இடம்பெறாத** புணர்ச்சி
    (1) பேசுங்கிளி (2) காற்சட்டை (3) ஆட்பதிவு (4) மாங்கனி

ஒவ்வொரு வினாவுக்கும் சரியான விடையை எழுதி அனுப்பும் முதல் மூன்று வெற்றியாளர்களுக்குப் பரிசில் வழங்கப்படும்.
முடிவுத் திகதி : 03.01.2019.

அனுப்பவேண்டிய முகவரி :
ஆசிரியர், அரங்கம், 227, பார் வீதி, மட்டக்களப்பு

## மொழி வளம் - விடை

**மொழி வளம்** என்ற தலைப்பில் கேட்கப்பட்ட வினாக்களுக்குரிய விடை

| | | | |
|---|---|---|---|
| 1. | (2) | 6. (1) | 11. (2) |
| 2. | (1) | 7. (1) | 12. (1) |
| 3. | (4) | 8. (4) | 13. (3) |
| 4. | (3) | 9. (3) | 14. (4) |
| 5. | (4) | 10. (2) | 15. (2) |

# கற்போம்

## விஞ்ஞானமும் தொழில்நுட்பவியலும் – இரசாயனவியல்

### க.பொ.த சாதாரணதர மாணவர்களுக்கானது

## இரசாயனத் தாக்கங்கள்

- R.N.Rஅரவிந்த் -

**இரசாயனப் பிணைப்புகள்**

மூலக அனுக்கள் உறுதி நிலையை அடைவதற்காக அவற்றின் வலுவளவு ஓட்டிலுள்ள இலத்திரனை இழத்தல் அல்லது ஏற்றல் அல்லது பங்கிடுவதன் மூலம் உருவாகும் அயன்கள் அல்லது அணுக்களிடையே ஏற்றபடும் கவர்ச்சி விசை இரசாயனப்பிணைப்பு ஆகும்.

இப்பிணைப்பு இரு வகைப்படும்.

1. அயன் பிணைப்பு
2. பங்கீட்டுவலுப்பிணைப்பு

**அயன் பிணைப்பு**

அணுக்களிடையே இலத்திரன்கள் இடமாற்றப்படுவதனால் நேர் மறை அயன்கள் உருவாக்கப்பட்டு அவ்வயன்களிடையே தோன்றும் வலிமையான நிலைமின் கவர்ச்சியினால் தோன்றும் பிணைப்பு அயன் பிணைப்பு அயன்பிணைப்பு அல்லது மின்வலுப்பிணைப்பு ஆகும்.

**Example- NaCl**

**பங்கீட்டுவலுப்பிணைப்பு**

அணுக்கள் தமக்கிடையே இலத்திரன்களைப் பங்கிட்டுக்கொள்வதன் மூலம் விழுமிய வாயு இலத்திரன் நிலையமைப்பை பெற்றுக் கொள்ளும். இவ்விரு அணுக்களுக்கிடையே இலத்திரன் பங்கீட்டுக் கொள்வதால் அவ்வணுக்களுக்கிடையே ஏற்படும் பிணைப்பு பங்கீட்டுவலுப்பிணைப்பு ஆகும்.

**Example-$F_2$, $H_2$, $O_2$, $N_2$**

பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. $LiO_2$ (……………………)
2. $H_2O$ (……………………)
3. MgS (……………………)
4. $CCl_4$ (……………………)
5. $CaCl_2$ (……………………)
6. KF (……………………)
7. $CH_4$ (……………………)
8. $NH_3$ (……………………)
9. NaCl (……………………)
10. HCl (……………………)

வெள்ளி, டிசம்பர் 14, 2018 இதழ் – 43 வினாக்களுக்கான விடைகள்

1. இரசாயனச் சேர்க்கைத்தாக்கம்.
2. இரசாயனச் சேர்க்கைத்தாக்கம்.
3. இரசாயனப் பிரிகைத்தாக்கம்.
4. இரசாயன ஒற்றை இடப்பெயர்ச்சித்தாக்கம்.
5. இரசாயன இரட்டை இடப்பெயர்ச்சித்தாக்கம்.

பக்க அனுசரணை

NCL
NELSON COLLEGE LONDON
IN PARTNERSHIP WITH
LONDON METROPOLITAN UNIVERSITY

## வியப்பிலாழ்த்தும் மட்டக்களப்பு ஆகமம் சாரா தெய்வ வழிபாட்டுமுறைகளும் சடங்குகளும்

--- பேராசிரியர் சி. மௌனகுரு ---

# மட்டக்களப்பில் வாழும் தமிழ் பேசும் பூர்வீக குடிகளிடம் இன்றும் காணப்படும் சில புராதன வழிபாட்டு முறைகள்-2

குமார தெய்வ இரண்டாம் நாள் சடங்கு

--------------------------------------------------

இரண்டாம் நாட் சடங்கு தொடங்குமுன்னர் உத்தியாக்களுக்குரிய தாளத்தைக்

கொட்டில் வாசிப்பர். உத்தியாக்கள் என்பவர்கள் அக் குழுவில் இறந்த தாய், தந்தை, தந்தையின் தந்தை ஆகிய முன்னோர்களாவர். இதனை நாம் இறந்த முன்னோர் வணக்கம் எனலாம். உருவம் பெற்ற தெய்வக்கோட்பாடுகள் உருவாகுமுன்னர் இம் முன்னோர் வணக்கமே பூர்வீக குடிகளிடம் இருந்தன என மானிடவியலாளர் நிறுவியுள்ளனர். ஆவி வடிவினராகிய இம்முன்னோர்கள் கப்புகனார்மீது வந்து வில், அம்பு எடுத்து ஆடுவார்கள்,மாரி அம்மன் காளி அம்மன் மனிதர் உடலில் இடம் கொள்வதுபோல இந்த உத்தியாக்களும் மனிதர் உடலில் இடம்கொண்டு ஆடுவர், பேசுவர். உத்தி என்பதற்கு கன்னடத்தில் அர்த்தம் மேலே என்பதாகும். மேலே போய் விட்ட ஆத்மாக்கள் என்ற பொருள்பட இவர்கள் உத்தியாக்கள் என அழைக்கப்படுகிறார்கள். இவர்கள் வில் அம்புடன் அபிநயித்து ஆடுதல் நாடகத் தன்மையுடையதாயிருக்கும். அவர்கட்குரிய பாடல் பின்வருமாறு:

தா உடயப்பா கமகமதோ
பணமளதோயே. கமந்தி ஜய்ய் நாதோ
ஒ ஓ ஒ நகமணாய் V–
பந்தோவே பந்த தோவே
தோப்பாரம் பொடி பொந்தோ
கமலவுட்டியமதோ யே.
கமந்தி ஜய்ய்.நாதோ நகமணாய்.
உயவில்லம் பாணனி வில்லம் பாணனி
தும்பித வலண்டாய் பயவிட்ட வலண்டாய்
விறுதா விறுதாடியதோயே.
கமந்தி ஜய்ய் நாதோ. நகமணாய்

இப்பாடல்பாடிக் கொட்டு அடிக்க உத்தியாக்கள் தெய்வக்காரரில் பிரசன்னமாவார்கள். பிரசன்னமானதும் அங்குள்ளோர் அவர்களை தம் முனோரைக் கண்ட உணர்வுடன் வணங்குவர்.

உத்தியாக்கள்( இறந்த முன்னோர்) பிரசன்னமாகி ஆடினால்தான் ஏனைய தெய்வங்கள் ஒழுங்காக வரும் என்பது இவர்கள் நம்பிக்கை, தமது முன்னோரைப் போல அம்பு, வில் எடுத்து வேட்டை ஆடும் செய்கையினை இவர்கள் செய்வதை இங்கு நாம் காணமுடிகிறது. இறந்த தம் முன்னோர் வருவர் என்ற நம்பிக்கையில் அவர்களுக்கு



விருப்பமான உணவுப் பொருட்களை கோவிலுக்குக் கொண்டு செல்வர். இன்னொருவரின் உடலிற் பிரசன்னமாகி ஆடும் அந்த முன்னோரும் தம் புதல்வர் அல்லது பேரர்கள் தமக்கென சமைத்துக் கொணரும் உணவுகளை உண்டு மகிழ்ந்து உறவாடி சந்ததியை ஆசீர்வதித்துச்செல்வர்.

பிராமணீய பிதிர்ச் சடங்கு வரமுன்னர் நம் முன்னோர் மத்தியில் வழக்கிலிருந்த பிதிர்ச்சடங்கு இதுவாக இருக்கலாம்.

இறந்தவர்கள் இறக்கவில்லை நம் அருகில் வாழ்கிறர்கள், நமக்கு வலிமை தருகிறார்கள் என்ற நம்பிக்கையே பூர்வீக குடிகளிடம் இருந்தன. கடவுள் கோட்பாடு வருமுன்னர் பூர்வீகக் குடிகள் ஆவிகளையே வணங்கினர் என்பதனை மானிடவியலாளர்கள் தம் ஆய்வுகள் மூலம் நிறுவியுள்ளனர்.

அப்புராதன ஆவியுலக் கோட்பாடும் அதனை ஒட்டிய வழிபாடுமான இச்சடங்கு இன்றும் மட்டக்களப்பின் பூர்வீக குடிகளிடம் காணப்படுகின்றன, உலக சமய வரலாற்றில் ஆவியுலகக் கோட்பாட்டின் எச்ச சொச்சங்களை மட்டக்களப்பின் சில வழிபாட்டுமுறைகளில் இன்றும் இங்கு காண்கிறோம். இது பற்றிய மானிடவியல் ஆய்வுகள் இன்னும் இங்கு நடைபெறவில்லை

இரண்டாம் நாள் சடங்கு

--------------------------------------------------

இரண்டாம் சடங்கன்று முதல் நாள் வைத்த மடை கலைக்கப்பட்டு புதிய மடை வைக்கப்படும்.மீண்டும் சுவாமி அபிஷேகம் செய்யப்படும். ஆலத்தி தெய்வம் அன்று வராது. உத்தியாக்கள் வந்து சென்றதன்பின் கப்புகர்கள் (பூசார்மார்) மீது குமாரகலை, அம்மன் கலை, தெவுத்தன் தெய்வம், காட்டுத்தெய்வம், செம்பகனாட்சி, பெய்யனாட்சி, கடற்பகுதி மாறா, பணிக்க மாறா, வதன மாறா, பட்டாணி, புள்ளிக்காரன் ஆகிய தெய்வங்கள் வந்து வெளிப்படும்.



ஒவ்வொரு தெய்வத்திற்கும், ஒவ்வொரு விதமான கொட்டும், ஒவ்வொரு விதமான "வேட பாஷை" என அழைக்கப்படும் பாசையில் அமைந்த பாடலும் உண்டு. (இப்பாடலும், கொட்டு அடித்தலும், பரம்பரையாகப் பழக்கப்படுகிறது. கடற்பகுதி என்னும் தெய்வம் தமிழ் பாஷையில் மாநீலி என்றும், வேடபாஷையில் வைதீமுந்த கெனவோ என்றும் அழைக்கப்படுவதாக இவர்கள் கூறினர்.

ஏழாம் சடங்குவரை தொடர்ந்து இவ்வண்ணம் சடங்குகள் நடைபெறும்.

அயோத்தியாய, மாந்திய, மனமுந்த, குருவிலிமுந்த, எரிகணுமுந்த ஆகிய தெய்வங்கள் கூடாத நோய்களைக் கொடுக்கும் தெய்வங்களாகும். இவைகளும் வெளிப்பட்டு வில், அம்பு எடுத்து விளையாடும். இவற்றிற்குப் பறவைகள் என்று பெயர். ஆட்களுக்கு வருத்தம் ஏற்படின் பறவை தோஷம் என அழைக்கப்படும்.

இந்தக் குமார கலைத் தெய்வம் இந்நோய்களைத் தீர்க்கும் தெய்வம் ஆகும்."


நாடகத் தன்மை வாய்ந்த இறுதிநாள் சடங்கு

--------------------------------------------------

இறுதிச் சடங்கு மிக நாடகத் தன்மை பொருந்திய சடங்காகும்.

இறுதிச் சடங்கிற்கு முதல் நாளிரவு வினாசகப் பானை (வினாயகப் பானை) எழுந்தருளப் பண்ணுவர். (எழுந்துவர) அன்று இரவு பலகாரம் வடிக்கும் தெய்வம் வந்து முறபடும். அதற்குப் பலகாரம் வடிப்பர். அந்நேரம் மொட்டாக்குத் தெய்வம் என்றொரு தெய்வம் முறபட்டு பலகாரம் வடிக்கும். மாவைப் பிரட்டி அதனைப் பலகாரமாக ஆட்கள் பண்ண இத்தெய்வம் ஆடிவந்து பலகாரத்தை வாங்கி எண்ணெய்ச் சட்டிக்குள் போடும்.

பலகாரம் வெந்து கொண்டிருக்கையில் பதத்திற்கு வந்ததும் அத்தெய்வம் வந்து அதைக் கையால் எடுத்துக் கொண்டு சென்று மடையில் வைத்துக் குமாரருக்கு எட்டிக் கொடுக்கும். மூன்று பலகாரம் இப்படி வடித்தபின் ஏனைய பலகாரங்களை ஆட்கள் வடிப்பர். அதன்பின் இரவு 3 1/2 மணிக்கு வினாசகப் பானையை 2ம் கட்டாடியும், இன்னொரு பானையை 8ம் கட்டாடியும் பெண்கள் அணியும் சேலை உடுத்திக் கொண்டு கோயிலைச் சுற்றித் தாங்கிக்




செல்ல, முதலாம் கட்டாடி குமாரதெய்வம் முறபட்டு ஆடிச் செல்வார். அவர் இரண்டு கம்புகளைக் குறுக்காக தர (X) வடிவிற் பிடித்துக் கொண்டு பானை கொண்டு செல்பவர் முன் ஆடிச்செல்வர். (முருகன் வேடர்க்கு வள்ளியைத் திருமணம் செய்யக் கிழவனாகக் கம்பு ஊன்றி ஊன்றி வந்ததை ஞாபகப்படுத்தவே இக் கம்பினைப் பிடித்து ஆடுவதாக ஒரு பூசகர் தெரிவித்தார்). "எல்லா இடங்களுக்கும் 2 கம்புகளையும் கொண்டு செல்வார். எல்லா இடங்களுக்கும் அவ்விரண்டு கம்புகளுமே காவலாக இருக்கும். பின்பு பானை பொங்கும் நேரம் பாலை ஒப்பெடுக்க குமார தெய்வம் மீண்டும் வரும். அத்தோடு இரவு நிகழ்ச்சி முடிவடையும். இறுதிச் சடங்கு பகல் நேரத்திலேயே நடைபெறும். இச்சடங்கன்று மாறாத் தெய்வம் கப்புகனாரில் முறபடும். மாறாத் தெய்வம் வேட்டை ஆடும் தெய்வமாகும். இத்தெய்வம் போல உருக்கொண்டு ஆடுபவர்கள் இறுதிச் சடங்கன்று செய்யும் செய்கைகளும், அதனோடு ஒட்டிய நிகழ்ச்சிகளும் வேடர்கள் தமது புராதன வாழ்க்கையை நடித்துக் காட்டுகிறார்களோ என்று ஐயுறும் வண்ணம் நாடகத் தன்மையுடையதாயிருக்கும்.

இறுதிச் சடங்கன்று மாறாத் தெய்வம் முறபடுபவர் ஏறி விளை யாடுவதற்கென ஓர் உயரமான பந்தல் அமைக்கப்படும். 15 அல்லது 20 அடி உயரமானதாக அமைக்கப்பட்டு உச்சியில் இருவர் ஏறி நின்று ஆடும் வகையில் உச்சியில் கம்புகள் பரவிப் பரவி அமைக்கப்படும். இரு புறமும் இருவர் ஏறிப்போகும் வகையில் ஏணிபோல பதினொரு விட்டங்கள் அமைக்கப்படும். பந்தலின் உச்சியில் 3

தொடர்ச்சி... (பக்கம் -15 )

## அனாமிகாஞ்சலி

மகுடம் கலை இலக்கிய வட்ட மதிப்பார்ந்த மைக்கல் கொலினின் ஒருங்கிணைப்பில் விரிவுரையாளர் பாலசிங்கம் சுகுமாரின் "ஒரு தேவதையின் சிறகசைப்பு" கவிதை நூல்வெளியீடும் அவரின் அன்பான ஆருயிர் மகள் அனாமிகாவிற்கான நினைவுப் பேருரையும் "அரங்கம்" வார இதழின் ஆழிப்பேரலையின் அனர்த்த மீளெழுகை காணொளி காட்சிப்படுத்தலும், அத்துடன் ஆழிப்பேரலை அவலங்களை துலாம்பரமாக்கிய ஓவியர் குலராஜின் ஓவியக்கண்காட்சியுமென கலை சங்கமிப்பு நிகழ்வாக அனாமிகாஞ்சலி நிகழ்வு மட்டக்களப்பில் ஆழிப்பேரலை அனர்த்த நினைவேந்தல் தினமன்று(26-12-2018) நிகழ்ந்தேறியது .

இந்நிகழ்விற்கான வரவேற்புரையினை மகுடம் ஆசிரியர் திரு வி.மைக்கல் கொலினும் தலைமையுரையினை மூத்த ஊடகவியலாளர், அரங்கம் ஆசிரியர் திரு பூ.சீவகனும் பிரதம அதிதி உரையினை மட்டக்களப்பு மாநகர சபை முதல்வர் கௌரவ திரு.தி. சரவணபவனும் சிறப்பு அதிதி உரையினை கடற்றொழில், நீரியல் வள, கிராமிய பொருளாதார விவகார அமைச்சின் பணிப்பாளர் கலாநிதி சதீஸ்குமார் சிவலிங்கமும் நிகழ்த்தினர்.

நூலின் முதற்பிரதியினை தேனுகா மற்றும் துவாரகாவிடமிருந்து மட்டக்களப்பு தமிழ்ச் சங்கத்தலைவர் சைவப்புரவலர் திரு வி. ரஞ்சிதமூர்த்தி பெற்றுக்கொண்டார்.
நூல் அறிமுகவுரையினை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி பிரியதர்சினி ஜெகதீஸ்வரன் நிகழ்த்தினார். இந்நிகழ்வோடு



இணைந்தவகையில் கலாநிதி தெ. பிரதீபனால் "ஈழத்தமிழர் பண்பாட்டில் தமிழ் எனும் புதிய இசைக்கருவி" பற்றிய ஆய்வுரை அனாமிகா நினைவுப் பேருரையாக காணொளிகாட்சிகளுடன் மிகச்சிறப்பான வகையிலே நிகழ்த்தப்பெற்றது. ஓவியர் அறிமுகவுரையினை சிரேஷ்டவிரிவுரையாளர் கலாநிதி சிவரட்ணம் சுந்தரம்பிள்ளை ஓவியரின் நுட்பங்களை அலசி ஆராய்ந்து ஆழ்ந்தகன்ற ஆய்வுரையாகவும் நிகழ்த்தினார்.

அனாமிகாஞ்சலிக்கான கவிதாஞ்சலியினை கவிதாயினிகளான அழகு திலகா மற்றும் திருமதி சுதாகரி மணிவண்ணன் ஆகியோர் அழகு கவிதைகளூடாக நிகழ்த்தினர். இந்நிகழ்வினை மேலும் மெருகூட்டி இசையால் உணர்வூட்டும் வகையில் பாலசுகுமார் ஐயாவின் அன்புச் சகோதரர் பாடகர் திரு பா. சந்திரகுமார் இசையஞ்சலி நிகழ்த்தினார். நிகழ்வின் நன்றியுரையினை செல்வி அம்ரிதா விஜயன் அழகு தமிழிலுரைத்தார். அனாமிகாஞ்சலி நிகழ்வின் ஒட்டுமொத்த உணர்வெழுச்சியுடனான நிகழ்ச்சி தொகுப்பினை கவிஞர்
திரு. ஜி.எழில்வண்ணன் தொகுத்து வழங்கினார்.

**ரகுதாஸ் சண்முகநாதன்**

## இருவர் ரயிலில் பாய்ந்து தற்கொலை

அநுராதபுரம், புளியங்குளம் பகுதியில் 17 வயதுடைய இளைஞன் ஒருவனும் 14 வயதுடைய சிறுமி ஒருவரும் புகையிரதத்தில் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டுள்ளனர். வியாழனன்று (27) காலை அனுராதபுரத்தில் இருந்து மதவாச்சி நோக்கி பயணித்த புகையிரதத்தில் பாய்ந்தே குறித்த இருவரும் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அந்த இளைஞன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதுடன், சிறுமி அனுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. காதல் தொடர்பில் இருவரும் தற்கொலை செய்து கொண்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது.

அனுராதபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தொடர்ச்சி...

## மட்டக்களப்பில் வாழும் தமிழ் பேசும் பூர்வீக குடிகளிடம் இன்றும் காணப்படும் சில புராதன வழிபாட்டு முறைகள்-2

கும்பா குடம், தென்னம் குருத்தோலை, வாழை மடல் கொண்டு அமைக்கப்படும். பந்தல் தென்னங் குருத்தோலை, இலைகள், பூக்கள் ஆகியவற்றால் அலங்கரிக்கப்படும். தோரணமும் போடப்படும். )

இறுதி நாளன்று கப்புகனாரில் மாறாத் தெய்வம் வெளிப்பட்டுப் பக்தர்களாகிய பார்வையாளர்களிடம் அதிக பக்தி கொண்டோர் எனக் கருதப்படுபவரிடம் தேன் பூச்சி இருக்கிறதா? என்று கேட்கும். தம்மிடந் தான் தெய்வம் கேட்குமென ஊகித்தவர்கள் தேன் பூச்சி தேடி வைத்திருப்பார்கள். தேன் பூச்சி அவரிடம் இல்லாவிடின் அவரிடம் கோடரியையும், பெட்டியையும் கொடுத்து இந்த வழியாற் சென்றால் பூச்சி கிடைக்கும் என்று அவரை மாறா தெய்வம் அனுப்பி வைக்கும் மாறாத் தெய்வம் தேன் தேடிச்செல்லும். தேன் தேடிச் செல்வதும் தேன் எடுப்பதும் தேன்பூச்சி குத்தித் துடிப்பதும் ஓர் நாடகத் தன்மையுடன் நிகழ்த்தப்படும்.

(தொடரும்).

தொடர்ச்சி...

# வேல் வழிபாடு

அவர்கள் முன்வைத்துள்ள கருத்தொன்றை இணைத்துப் பார்க்க வேண்டியுள்ளது. அவர், சில ஆய்வாளர்கள் சிறுதெய்வங்கள் மேனிலை பெறும் பொழுது அவைகள் சமஸ்கிருத நெறிப்படுக்கைக்குள் உட்படுத்தப்படுகின்றன என்பர். உண்மையில் சிறுதெய்வங்கள் எவையும் சமஸ்கிருத நெறிப்படுக்கைக்குள் உட்படுத்தமுடியாது. காரணம் ஆகமங்களிலோ சிற்பசாத்திரங்களிலோ சிறு தெய்வங்கள் பற்றிய குறிப்புக்கள் எவையும் இடம் பெறவில்லை என்பது மனங்கொள்ளத்தக்கது. இவற்றில் இடம் பெறாத ஒரு தெய்வத்துக்கு விதி முறை தேடுதல் என்பது முயற்கொம்பு தேடுதலுக்கு ஒப்பானது. ஒருவாறு ஒரு சிறு தெய்வத்தை சமஸ்கிருத நெறிப்படுக்கைக்கு உட்படுத்தும் பொழுது அத்தெய்வம் முற்றிலும் ஆலயத்தோடும் சமஸ்கிருத நெறிப்படுக்கையோடும் தொடர்பற்றதாகக் காணப்படுகின்றதே ஒழிய, அது சமஸ்கிருத நெறிப்படுக்கையில் உட்படுத்தப்படவில்லை என்பதே உண்மை.'(22) எனக்குறிப்படுகிறார். சமஸ்கிருத நெறிப்படுக்கைக்கு எதிரான போக்கின் மற்றொரு பரிமாணம் இதுவாகும்.

மேலும் அவர், 'கண்ணகி அம்மன் கோயில்கள் பல புவனேஸ்வரி, இராஜேஸ்வரி, மீனாட்சி என்னும் கோயில்களாக மாற்றம் அடைந்துள்ளன. ஆனால், அங்கு கண்ணகி அம்மன் சமஸ்கிருத நெறிப்படுக்கைக்குள் உட்படுத்தப்படவில்லை என்பதே உண்மை. அவ்வாலயங்களில் கண்ணகி அம்மன் படிமத்திற்குப் பதிலாக புவனேஸ்வரி அம்மன் படிமமோ மீனாட்சி அம்மன் படிமமோ எழுந்தருளச் செய்யப்பெற்று சமஸ்கிருத மந்திரச் சடங்குகள் ஆற்றப்பெறுகின்றன.அங்கு கண்ணகி படிமம் கோயிலின் வெளியில் தனியான இடத்தில் வைக்கப்படுகின்றது. இதற்கு எடுத்துக்காட்டாக சதுமலை புவனேஸ்வரி அம்மன் ஆலயத்தைக் குறிப்பிடலாம்.'(23) எனவும் குறிப்பிடுகிறார்.

இது சமஸ்கிருதமயமாக்கலுக்கு உள்ளாக்கப்படும் பொழுது சிறுதெய்வங்கள் புறமொதுக்கப்படுதலைக் குறிக்கிறது. இவ்வாறு புறமொதுக்கப்பட்ட தெய்வங்கள் பலவற்றை ஈழத்தில் நாம் கண்டறியலாம் போலுள்ளது. எனவே புறமொதுக்கப்பட்ட தெய்வங்கள் குறித்த ஆய்வு பண்டைய சமூகம் மற்றும் சமூக மாற்றம் குறித்தும் பல தகவல்களை வழங்கக்கூடியதாக அமையலாம்.

ஆனால் நல்லூரிலிருந்து மண்டூர் வரையான பல முருகன் கோவில்களில் சமஸ்கிருதமயமாக்கமானது வேறுவகையிலும் எதிர் கொள்ளப்பட்டுள்ளது. பல கோவில்களில் வேல் மூலஸ்தானத்தில் வைக்கப்பட முருகன் அருகே வைக்கப்படும் நிலையுடன் மண்டூர், செல்வச்சந்நிதி போன்ற சில கோவில்களில் சமஸ்கிருதமய-பிராமணியமய வழிபாட்டு முறை ஏற்றுக் கொள்ளப்படாத நிலையும் காணப்படுகிறது. இங்கு ஆகமச் சடங்குகள் புறமொதுக்கப்பட்டுள்ளன.பாரம்பரியச் சடங்குகள் பின்பற்றப்படுகின்றன.

மட்டக்களப்பில் இன்றும் வழக்கிலுள்ள ஆயதங்களே பிரதானமாக அமைகிற தொல்வழிபாட்டுக் குமார கோவில்களின் முன்புறம் வைக்கப்பட்டுள்ள மரத்தாலான கழுமரம் வேல் போன்ற தோற்றமுடையதே. இவை இங்கு வேல் வழிபாடு முக்கியம் பெற்றிருப்பதனைக் காட்டுகிறது. இங்கு மரத்திலான வேலை கழு மரம் எனக் கூறுவர். சங்க கால சாளுவன்குப்ப கல்லாலான வேலை ஒத்ததாகவே இங்குள்ள கழுமரங்கள்-வேல் காணப்படுகின்றன. கிரான் குமார கோவிலில் வைக்கப்பட்டுள்ள கழுமரம், கழுக்குமாரர் என அழைக்கப்படுவதுடன் அதற்கென தனியான சாமியாட்டமும் இடம் பெறுவதுண்டு.

மட்டக்களப்பில் இன்றும் வழக்கிலுள்ள தொல்வழிபாடான குமார வழிபாட்டில் மரத்திலான வேல் நடப்பட்டு வழிபடப்படுகின்றமையும், தெய்வமேறி ஆடுவோர் மரப்பொல்லுகளையும் சிறிய இரும்பிலான கத்திகளையும் கொண்டு தெய்வமாடும் மரபு இன்றும் நிலவுகிறது. ஆக, இங்கு மர மற்றும் இரும்பு ஆயுதங்கள் ஒரு சேர வழிபாட்டில் இடம் பெறுகின்றதனைக் காணலாம். வானமாமலை அவர்கள் 'கல் கருவி நாகரிகம் மறைந்து உலோக நாகரிகம் தோன்றி இரண்டும் கலவையாக நிலைபெற்றிருந்த காலத்தில் உலோகக் கருவிகளுக்கும், அக்கருவியைப் பயன்படுத்துவோருக்கும் ஏற்பட்ட மதிப்பினால், வேலைப் பயன்படுத்தும் ஒரு தெய்வம் பண்டைத் தமிழர் சிந்தனையில் மதிப்புப் பெற்றது.' எனக் குறிப்பிட்டுள்ள கருத்து இங்கு கவனத்தில் கொள்ள வேண்டியதாகிறது.

அதே சமயம் மானிடவியலாளர்கள் குறிப்பிட்டுள்ள 'பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முந்திய மரவழிபாடும், வேல் வழிபாடும்' இங்கு நிலவுகிறதா? என்ற வினாவை எழுப்ப வேண்டியவர்களாக உள்ளோம். இரண்டும் ஒரே பண்பாட்டுத் தளத்திற்குரியனவா? அல்லது இரண்டும் ஒரே பொருளாதார-சமூக தளத்தைக் கொண்டனவா? என்ற வினாக்களும் முக்கியமாகின்றன. இத்தடத்திலான தேடல், நமது சமூகம் குறித்த புதிய பொருளாதார-சமூக நிலைமைகளை கண்டறியத் துணைபுரியலாம்.

அகழ்வாய்வுகள் மூலம் கண்டறியப்பட்ட தொல்பழங்காலத்திற்குரிய வேல், சாளுவன் குப்பத்தில் கண்டெடுக்கப்பட்ட சங்க காலத்துக்குரிய கல்லாலான வேல், சங்க இலக்கியங்களில் கூறப்படும் வேலன் ஏந்தும் வேல், வேலன் தொடர்பான தகவல்கள், சங்க இலக்கியங்களில் காணப்படும் வேல் பற்றிய சித்தரிப்புக்கள், தமிழ் நாட்டிலும் ஈழத்திலும் உள்ள தொன்மையான பிரசித்தமான முருகன் கோவில்களில் மூலஸ்தானத்தில் வைக்கப்பட்டுள்ள வேல்,மட்டக்களப்பில் குமார கோவில்களில் வழிபடப்படும் கழுமரம்-வேல் என்பன வேல் வழிபாடு தனியொரு வழிபாடாக இருந்திருக்க முடியும் என்பதனை எடுத்துக்காட்டுகின்றன.

வேல் வழிபாடு தமிழர்கள் மத்தியில் தொல்காலத்தில் நிலவியிருக்க வேண்டும் எனவும், அவ்வேல் வழிபாடு சங்க இலங்கியங்களில் முருகு வழிபாட்டுடன் இணைந்து விட்டது எனவும், வேல் வழிபாட்டின் எச்சங்கள் தமிழர்களிடையேயும் ஈழத்தமிழர்களிடையே இன்றும் பேணப்பட்டு வருகின்றது எனவும் கருத வேண்டியுள்ளது.

## அகில இலங்கை சமாதான நீதவான்



வெலிகாமம் - மதுராப்புரயைச் சேர்ந்த முஹம்மது இஸ்மாயில் முஹம்மது மைபரூஸ் (கலைமகன் பைரூஸ்) அகில இலங்கை தீவு முழுவதற்குமான சமாதான நீதவானாக நீதி அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

மாத்தறை நீதவான் நீதிமன்ற மேலதிக நீதவான் ஆர். வீ. நில்மினி கே. விதாரன முன்னிலையில் நாடு முழுவதுக்குமான சமாதான நீதவானாக அவர் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டுள்ளார். மதுராப்புர முஸ்லிம் விவாகப் பதிவாளரான இவர், வெலிகமயின் ஏனைய பிரதேசங்களினதும், போர்வைப் பிரதேசத்தினதும் பதில் முஸ்லிம் விவாகப் பதிவாளராகவும் கடமையாற்றுகின்றார்.

இவர், இஸ்மாயில் - பீபி ஜெஸீமா தம்பதியினரின் சிரேட்ட புதல்வரும் அஸ்ஸபா வித்தியாலயம், அறபா தேசிய பாடசாலை என்பவற்றின் பழைய மாணவருமாவார்.

தொடர்ச்சி...

## ஏழிசை மன்னர் தியாகராஜ பாகவதரின் ஹரிதாஸ் அன்று! சூப்பர் ஸ்டார் ரஜனியின் 2.0 இன்று !!

வரும் மன்னவன் வந்தானடி பாடல் புகழ்பெற்றது. கவியரசு கண்ணதாசன் அந்தப்பாடலை இயற்றினார் திரை இசைத்திலகம் கே. வி. மகாதேவன் இசையமைத்தார். இந்தப்பாடலின் முதல் அடிகளாக ஐந்து பல்லவிகளை கவியரசர் எழுதியிருப்பார். இறுதி பல்லவியுடன் பி. சுசீலா மன்னவன் வந்தானடி எனப்பாடவும், மன்னராக தோன்றும் நடிகர் திலகம் கம்பீரமாக ஒரு நடை நடந்துவருவார்.

இந்தப்பாடலை பாடுவதற்கு தான் நீண்ட பயிற்சி எடுத்துக்கொண்டதாக பி. சுசீலா சொல்லியிருக்கிறார். இந்தப்பாடல் காட்சிக்கான படப்பிடிப்பு அபிநயம் தொடர்பான சித்திரிப்பில் நேர்ந்த சிக்கல்களினால், பல தடவைகள் மீண்டும் மீண்டும் எடுக்கப்பட்டதாகவும், நடு இரவு வரையில் படப்பிடிப்பு நடந்ததாகவும் பத்மினி சொல்லியிருக்கிறார்.

இன்று நாம் டிஜிட்டல் யுகத்தில் வாழ்கின்றோம். கடந்த நவம்பர் மாதம் 29 ஆம் திகதி உலகெங்கும் திரைக்கு வந்துள்ள சங்கரின் இயக்கத்தில் ஜெயமோகனின் வசனத்தில், ஏ.ஆர். ரஹ்மானின் இசையமைப்பில் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் நடிப்பில் வந்துள்ள 2. 0 (ரூ பொய்ன்ட் சீரோ) திரைப்படத்தின் தொடக்கவிழா 2015 டிசம்பரில்தான் நடந்தது. சுமார் மூன்று ஆண்டுகள் தயாரிப்பிலிருந்த இந்த படத்தின் செலவு 600 கோடி என மதிப்பிடப்படுகிறது. 3டி கெமராவினால் எடுக்கப்பட்ட இந்தப்படத்தில் வரும் "எந்திரலோகத்து சுந்தரியே" பாடலை இதுவரையில் ஐந்து மில்லியன் ரசிகர்கள் கேட்டுள்ளதாக ஒரு புள்ளிவிபரம் கூறுகிறது. இந்தப்பாடலை 1980 இல் கவிப்பேரரசு வைரமுத்துவுக்கு பிறந்த மகன் மதன் கார்க்கி எழுதியிருக்கிறார். இந்தப்பாடலை கடந்த சில வாரங்களுக்குள் ஐந்து மில்லியனுக்கும் மேற்பட்ட மக்கள் கேட்டுள்ளனர். ஆனால், எவ்வளவு காலத்திற்கு இந்தப்பாடல் மக்கள் மனதில் நிற்கும் என்ற கேள்வியும் இருக்கிறது. அன்று பல ஆண்டுகளுக்கு முன்னர் வெளிவந்த பாடல்களான மன்மதலீலை, யாரடி நீ மோகினி, மன்னவன் வந்தானடி ஆகிய தலைப்புகளில் பின்னாளில் திரைப்படங்களும் வந்துவிட்டன. இனிவரும் காலத்தில் எந்திரலோகத்து சுந்தரியே என்ற பெயரில் ஒரு படமும் வெளியாகலாம். காத்திருந்து பார்ப்போம்!

1944 ஆம் ஆண்டு வெளிவந்த ஹரிதாஸ் அந்த ஆண்டு தீபாவளியன்றுதான் ரிலிஸானது. தொடர்ந்து ஒரே தியேட்டரில் 133 வாரங்கள் ஓடியது. அதாவது மூன்று தீபாவளிகளை கண்டது. சூப்பர் ஸடாரின் 2.0 எத்தனை வாரங்கள் ஓடும்?! இதில் வரும் எந்திரலோகத்து சுந்தரியே எவ்வளவு காலத்திற்கு ரசிகர்களின் செவிகளில் ரீங்காரிக்கும்...?

இசைஞானி இளையராஜா சொல்கிறார்: "எப்பொழுது கேட்டாலும் புத்தம்புது பூவைப் போல இருப்பதே பாடல். அதுவே பாடலுக்கான தகுதியாகும்"

இது அன்றும் பொருந்தும் இன்றும் பொருந்தும்!

# சிறப்பு மாநாடு

போருக்குப் பின்னரான இலங்கையில் சமூக - பொருளாதார மீளுருவாக்கம் குறித்து இந்த மாநாடு ஆராயும். வழங்கப்படும் உதவிகளை விநியோகிப்பதில் புலம்பெயர் மக்களின் பங்களிப்பு, செயற்பாடு குறித்து இது விவாதிக்கும்.

இந்த வகையில், போருக்கு பின்னரான தேவைகள் தொடர்பில் எந்த அளவுக்கு புலம்பெயர் மக்களின் பங்களிப்பு இருக்கிறது என்பதையும், கருத்துருவாக்க சிந்தனைகளிலும் மற்றும் அனைத்து தரப்பினரதும் பங்களிப்புக்கான கொள்கையிலும் இதுவரையிலான அபிவிருத்தித் திட்டங்களில் இருந்து கற்றுக்கொண்டவற்றை அர்த்தமுள்ள வகையில் எவ்வாறு பிரயோகிப்பது என்றும் இந்த மாநாடு ஆராயும்.



## இலங்கையில் போருக்குப் பின்னரான சமூக - பொருளாதார அபிவிருத்தியில் புலம்பெயர் மக்களின் பங்களிப்பு

இடம் : புலையவெளி கிராமம், பதுளை வீதி, செங்கலடி, மட்டக்களப்பு

காலம் : 19 (சனிக்கிழமை), ஜனவரி, 2019

**ஏற்பாடு: புலம்பெயர்ந்து வாழும் இலங்கைத்தமிழர்கள் அமைப்பு (பிரித்தானியா)**

NELSON COLLEGE LONDON
NCL
NELSON COLLEGE LONDON
Now Enrolling
Are you 18+
CALL US
Business Course:
0208 514 0033
Hospitality Management:
0203 500 0239
Judian Joseph
Mob: 07759802175
Mob: 07453641556
FIND OUT MORE
www.nelsoncollege.ac.uk
EMAIL US
info@nelsoncollege.ac.uk
IN PARTNERSHIP WITH
LONDON METROPOLITAN UNIVERSITY
Pearson

Printed at Express News Papers (Cey) Ltd and Published by Arangam News (Pvt)Ltd No 227 Bar Road Batticaloa